
Thendral | VOLUME 26 | ISSUE 11 | OCTOBER 2026 | TAMILONLINE.COM



மஹராஜ் நீம் கரோலி பாபா



எல்லார்வி



முனைவர்
இ. சுந்தரமூர்த்தி



பிரசாத் ரெட்டி காடம்ரெட்டி

தென்றல்™

A Monthly Magazine for Tamils living in North America

டாக்டர் விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன்


3rd i FILMS
SAN FRANCISCO
INTERNATIONAL
SOUTH
ASIAN
FILM
FESTIVAL
2026
thirdi.org
October 9-11 • San Francisco

Spend LESS
Save MORE

MADRAS GROCERIES

Indian Super Market

- Wide Range of food Products
- Garden Fresh Vegetables
- Organic Vegetables & Products
- Courteous Customer Care
- Ample Parking Space
- Clean Environment



5438 Central Ave. Newark, CA 94560.
(510) 894-1431

1187, W.El Camino Real Sunnyvale, California.
(408) 746-0808

Pay with your Smartphone, when you shop with us

Pay | pay | SAMSUNG pay | SoftPay

Madras

Food Court





Madras Café's

South Indian Veg Restaurant

Oh its So Delicious!

"tastier than ever"
Stop by once
You Can't Stop you

Business Hours:
Tue - Fri : 8.30a.m - 2.30p.m | 5.30p.m - 10.00p.m
Sat-Sun : 8.30a.m - 10.00p.m | Monday holiday

1177, W.El Camino Real, Sunnyvale, CA 94087

408.737.2323



Breakfast at 8.30am

At the intersection of El Camino & Bernardo

www.madrascafe.us

BAY AREA'S MOST FAVORITE GROCERY STORE

NOW OPEN

PLEASANTON

INDIA

CASH & CARRY

4040 Pimlico Dr • Pleasanton • CA 94588

Hours of Operation: **Mon - Sun: 9:00am - 10:00pm** • **www.indiacashandcarry.com**

Other Locations

SUNNYVALE
1032 E El Camino Real, Sunnyvale, CA 94087
(408) 509-1756

FREMONT
39175 Farwell Dr, Fremont, CA 94538
(510) 792-7383

SAN JOSE
1138 S De Anza Blvd, San Jose, CA 95129
(408) 253-7384

FOSTER CITY
750 Alma Ln #115. Foster City, CA 94404
(650) 212-0608



தென்றல்™

A Monthly Magazine for Tamils living in North America

October 2026 ■ Volume 26 ■ Issue 11

374, South Mary Avenue,
Sunnyvale CA 94086.
Ph: 408.245.0193 Fax: 408.715.2545
Email: thendral@tamilonline.com
website: http://www.tamilonline.com
Facebook.com/thendralmag

Publisher:	**C.K. Venkatraman**
Chief Editor:	**Madhurabharathi**
Associate Editors:	**Arvind Swaminathan**
	Sivakumar Natarajan
Contributing Editors:	**Kanthi Sundar**
	Saraswathi Thiagarajan
Design:	**B. Jeevamani**
Advisors:	**Chandra Bodapati**
	Prabakar Sundararajan
	Prabhu Venkates
	Gomes Ganapathi

To Advertise Contact
Ph: 408.245.0193
thendral@tamilonline.com

East Coast
Balaji Srinivasan
Saraswathi Thiagarajan
saraswathithiagarajan@yahoo.com

Chicago, Mid-west
Meena Suby
sumeego@gmail.com

Sacramento, California
Jayanthi Sridhar
Ph: 916.608.9533
jayanthis5@yahoo.com

Texas
Kathir Radhakrishnan
Ph: 214.227.9721
rkathir@yahoo.com

Michigan
Aravind Ramesh
karvanent@yahoo.com

THENDRAL
374, South Mary Avenue, Sunnyvale CA 94086.

Copyright @ 2006 THENDRAL (ISSN 1536-0865). All rights reserved. Reproduction in whole or part of any text, photography, or illustrations without written permission from the publisher is prohibited. The publishers assume no responsibility for unsolicited manuscripts, photographs, or illustrations. Views and opinions expressed in this publication are not necessarily those of the magazine and accordingly, no liability is assumed by the publisher thereof. Advertising Copy and artwork are the sole responsibility of individual advertisers.

உள்ளே:

☐ எழுத்தாளர்
எல்லார்வி - அரவிந்த் 3

☐ எழுத்தாளர் சிறுகதை
வாழும் வழி - எல்லார்வி 7

☐ அலமாரி
பரத நாட்டியத்தில் ஒரு குறை - வா.ரா 16

☐ சிறப்புப் பார்வை
டாக்டர் விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் 21

☐ கதிரவனைக் கேளுங்கள்!
ஆரம்பநிலை நிறுவன யுக்திகள் - கதிரவன் எழில்மன்னன் 28

☐ முன்னோடி
முனைவர் இ. சுந்தரமூர்த்தி 32

☐ சிறுகதை
திருமணங்கள் விமானத்திலும் நிச்சயிக்கப்படலாம்! - மருங்கர் 36

☐ மேலோர் வாழ்வில்
மஹராஜ் நீம் கரோலி பாபா 46

☐ நிகழ்வுகள்
பிரசாத் ரெட்டி காடம்ரெட்டிக்கு 'சங்கர ரத்னா' விருது 51

☐ Thendral Events Calendar
October 2026 54

☐ சின்ன கதை
கழுதை இறந்தது - பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா 58





தென்றல் பேசுகிறது

அமெரிக்கத் தேர்தலுக்கு ஒரு மாதமே உள்ளது. தாம் பதவி நாற்காலிகளில் அமர்த்தப் போகிறவர்கள் மெய்யாகவே நாட்டுக்குப் பெருமை சேர்ப்பார்களா, மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவார்களா என்பதை வாக்களிப்போர் யோசிக்க வேண்டும். பாரம்பரிய மனச் சாய்வுகளைத் தாண்ட வேண்டும். கனிமங்கள், உள்நாட்டு ரயில் பாதைகள் உட்பட்ட விரைவுப் போக்குவரத்து, உற்பத்தி வசதிகள், விலைவாசிக் குறைப்பு, மக்களை தண்டிக்காத வரி விதிப்பு, எல்லாத் தரப்பு மக்களும் அணுகத் தக்க, பரவலான மருத்துவ வசதிகள் என இவற்றை வெறும் கோஷமாக அல்லாமல், செயல்படுத்தத் தயாராக இருக்கும் நாணயமான தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இடையறாத போர்களாலும், இறக்குமதி வரி விதிப்பாலும் அமெரிக்கா மற்றும் உலக நாடுகளின் வளர்ச்சியைத் தடுக்கும் பிற்போக்கு அணுகுமுறை மாறியாக வேண்டும். லாஸ் ஏஞ்சலஸில் நித்யா ராமன் மேயர் பதவிக்கும், ஒஹையோவில் விவேக் ராமஸ்வாமி கவர்னர் பதவிக்கும் போட்டியிடுகிறார்கள். இருவருமே இந்திய வம்சாவளியினர். கட்சியின் நெடுநோக்கு, வேட்பாளரின் தகுதி ஆகிய இரண்டையும் சிந்தித்துப் பார்த்து மக்கள் வாக்களிக்க வேண்டும்.

அண்மையில் அமெரிக்கா வந்திருந்த ஜீ ஷின் பிங் 100,000 அமெரிக்க மாணவர்களைச் சீனக் கல்லூரிகளில் படிக்க வரும்படி அழைப்பு விடுத்தார்! ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் என்பார்கள். உலகெங்கிலும் இருந்து கனவுக் கண்களோடு அமெரிக்காவுக்கு இளைஞர்கள் வந்த காலம் வலிய மாற்றப்பட்டுள்ள நிலையில் இந்த அழைப்பு நம்மவர் கண்களைத் திறக்க வேண்டும். அமெரிக்காவின் அதிசயிக்கத் தக்க முன்னேற்றத்துக்குக் காரணம் எட்டுத் திக்கிலும் இருந்து கூர்மதியும் சிறந்த கல்வியும் கொண்ட அனைவரும் இங்கே வந்து சேர்ந்ததுதான். அவர்களை எதிரிகளாகப் பார்ப்பது இன்றைய அரசின் மிகப்பெரிய தவறு.

□ □ □

துபாயில் இருந்து இஸ்ரேலை நோக்கிப் பறந்த FlyDubai விமான பைலட் ஸ்மிட் மச்சாரின் வீர சாகஸம் உலகளாவிய பாராட்டுகளைப் பெற்றுள்ளது. நாமும் இந்த இந்தியரைப் பெருமிதத்தோடு பாராட்டுவோம்.

□ □ □

நாட்டுப்புறக் கலைச்சுடர் டாக்டர் விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் குறித்த அட்டைப்படக் கட்டுரை பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகும். நீம் கரோலி பாபா, எழுத்தாளர் எல்லார்வி, முனைவர் இ. சுந்தரமூர்த்தி ஆகியோர் குறித்த கட்டுரைகள் மனதுக்கு இதமும் எழுச்சியும் ஊட்டுவன.


வாசகர்களுக்கு காந்தி ஜயந்தி, நவராத்திரிப் பண்டிகை நல்வாழ்த்துகள்.

தென்றல்

Reach communities Local & Nationwide effectively
ADVERTISE IN THENDRAL
The Pride of Asian Indian Publications - in our 26th year
408.245.0193 ● thendral@tamilonline.com

எழுத்தாளர்

எல்லார்வி



ல.ரா. விஸ்வநாத சர்மா என்னும் இயற்பெயரைக் கொண்ட 'எல்லார்வி', தஞ்சாவூர் மாவட்டத்தின் கீரனூரில், டிசம்பர் 24, 1915 அன்று பிறந்தார். தனது பத்தாம் வயது முதலே வாசிப்பார்வம் கொண்டு விளங்கினார். ஜே.ஆர். ரங்கராஜு, வடுவூர் துரைசாமி ஐயங்கார், வை.மு. கோதைநாயகி அம்மாளின் நாவல்களை விரும்பி வாசித்தார். தனது சகோதரி மகன் நடனபாதனை உறங்க வைக்கப் பல்வேறு கதைகளைக் கூறி, கற்பனை ஆற்றலை வளர்த்துக் கொண்டார். இருபதாம் வயதில் தந்தையை இழந்தார். தஞ்சாவூர், கும்பகோணத்திற்கு வரும் இசைக் கலைஞர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. அவர்களிடம் உரையாடிப் பல தகவல்களைப் பெற்றார். அதுவே அவரது பிற்கால வாழ்க்கையில் இசை சார்ந்த பல சம்பவங்களை, நிகழ்ச்சிகளை விரிவாக எழுத உறுதுணையானது.

எல்லார்வி, தொடர்ந்து வாசித்தும், சகோதரி மகனுக்குக் கதை சொல்லியும் கதை எழுதும் ஆற்றல் கைவரப் பெற்றார். 1936-ல், துப்பறியும் நாவல் ஒன்றை எழுதினார். ஆனால், அதைப் பிரசுரிக்கும் முயற்சி தோல்வி அடைந்ததால் அதனை வெளியிடவில்லை. எழுத்தாளர் கல்கியினுடைய மனைவியின் தம்பி உறவு முறைதான் எல்லார்வி. அந்த வகையில், கல்கிக்குத் தனது சிறுகதை முயற்சிகள் குறித்துக் கடிதம் ஒன்றை எழுதினார்.



தொகுப்பு:

அரவிந்த்



எல்லார்வி படைப்புகள்

நாவல்கள்: இதயக்கமலம், அன்பே அமுதம், வெற்றிலைச் சுருள், டாக்டர் அருணா, நீர்க்குமிழி, பவானியின் கணவன், மைத்துனி, பனித்துளி, லோசனா, வனஜா, தேன்நிலவு, மலரும் வண்டும், மணப்பெண், புஷ்ப பாணம், ஆனந்த பைரவி, நவநீதம், புது மோகம், தாலி, வாழ்க்கைச் சுழல், அழகி, சுகந்தி, நீலாம்பரி.

சிறுகதைத் தொகுப்புகள்: மணி ஓசை, சபதம், அபவாதம், ஆசை முகம்.

சிறார் படைப்புகள்: அஞ்சாத சிங்கம், வளரும் தலைமுறை, பிறந்தநாள் பரிசு.

இசை நூல்கள்: எங்கே அண்ணா எங்கே?, அரியக்குடி, மைசூர் சௌடையா, ராஜமாணிக்கம் பிள்ளை, கலைமணிகள், செம்பைச் செல்வம், பிடாரம் கிருஷ்ணப்பா, சுவையான சங்கீத சம்பவங்கள், தோற்றவருக்குப் பரிசு, குறித்த நேரம், தோடி அடகு, கலைச் செல்வர், இசைமணிகள் மற்றும் பல

நாடகம்: பூங்குளம் பண்ணையார்

"உறவுக்கும் தொழிலுக்கும் கூட்டுறவு வைக்காமல், நட்பையும் உறவையும் ஒதுக்கி வைத்து, தனி முயற்சியில் முன்னுக்கு வருவதுதான் மேல்" என்று பதில் எழுதினார் கல்கி.

அதனால் எல்லார்வி, தனது படைப்புகளைப் பிற இதழ்களுக்கு அனுப்ப ஆரம்பித்தார். 'விஸ்வநாத சர்மா' என்ற இயற்பெயரைத் தவிர்த்து, 'எல்லார்வி' என்ற புனைபெயரில் எழுதலானார். முதல் சிறுகதை 1938-ல், *'ஹநுமான்'* இதழில் வெளிவந்தது. அது தந்த ஊக்கத்தில் இரண்டாவது சிறுகதையை எழுத, அது 1939-ல், *'காவேரி'* இதழில் பிரசுரமானது. தொடர்ந்து பல சிறுகதைகளையும், குறுநாவல்களையும் எழுதினார்.

'எல்லார்வி' யாரென்று தெரியாமலேயே கல்கி அவரது சில படைப்புகளைப் பிரசுரித்தார். *சுதேசமித்திரன்* இதழில், 'இரு சகோதரிகள்' என்ற தொடரை எழுதினார். அதற்கு நல்ல வரவேற்புக்

Count on me for home loan help

- Buy a home
- Refinance your current home loan
- Take advantage of the equity you already have in your home
- Buy a second home or investment property

Contact me to get started.

KAVITHA SENTHILKUMAR
Financial Center Lending Officer
NMLS ID: 297121
925.389.3286 Cell
kavitha.senthilkumar@bankofamerica.com
mortgage.bankofamerica.com



Bank of America

Credit and collateral are subject to approval. Terms and conditions apply. This is not a commitment to lend. Programs, rates, terms and conditions are subject to change without notice. Bank of America, N.A., Member FDIC.

Equal Housing Lender. ©2017 Bank of America Corporation. HL-105-AD 04-2017 ARNMN9VD

Shruthi Swara Laya

Touch the future with Traditional Arts



All Are Welcome

Classes in Fremont
Please contact Anu Suresh at 510.552.5824

Shruthi Swara Laya
School for Indian Music
annumanasa@gmail.com | 510.552.5824
www.shruthiswaralaya.com



Alcor Events

Ready to turn your dreams into reality?
Let's start planning your perfect event today with **"Alcor Events"**

We transform Your Celebrations into Timeless Memories.

From luxurious Indian weddings to grand celebrations of every kind, Alcor Events specializes in blending cultural traditions with unmatched modern elegance.

Your Dream Wedding ● **Your Milestone Moments** ● **Your Corporate Grandeur** - We bring it all to life, seamlessly.

DM us now for a **FREE Quote** or **WhatsApp** your dream event plans to **+91 76038 18005.**

Website: **www alcorevents.in** ● Email: **ceo@alcorevents.in**

SCAN ME

இசைக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் எழுதினார். அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், மைசூர் சௌடையா, பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை, செம்பை வைத்தியநாத பாகவதர், பிடாரம் கிருஷ்ணப்பா போன்றோரின் வாழ்க்கை வரலாறுகளை எழுதியிருக்கிறார்.

கிடைத்தது. தொடர்ந்து 'அன்பே அமுதம்' என்ற தொடர் *தினகரனில்* வெளியானது. இளம் விதவையின்மீது அன்பு கொண்ட மற்றொரு பெண்ணின் காதலனை, அந்த இளம்விதவை அறிவுரை கூறித் திருத்துவதாக அந்தத் தொடரை எழுதியிருந்தார். அதற்கும் நல்ல வரவேற்புக் கிடைத்தது. *குமுதத்தில்* 'பனித்துளி' தொடரை எழுதி வாசக வரவேற்பைப் பெற்றார். *குமுதத்தில்* எல்லார்வி எழுதிய 'கலீர் கலீர்' என்ற தொடர்நாவல், *'ஆடவந்த தெய்வம்'* என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்தது.

'வெற்றிலைச் சுருள்' *கலைமகளில்* வெளியான தொடர். தன் குடும்பத்தில் வாழ்ந்த, தன் வளர்ப்பு மகளாக வளர்ந்த ஒரு பெண்ணின் வாழ்க்கையையே அத்தொடரில் புனைவாக்கியிருந்தார் எல்லார்வி. அதுவும் பரவலான கவனம் பெற்றது. 1950-ல், முதன்முதலில் எழுதிய துப்பறியும் நாவலை விரிவாக்கி *'லோசனா'* என்ற தலைப்பில் வெளியிட்டார்.

எல்லார்வி, *பாரதமணி*, *மயூரம்*, *மிராசுதர்* முதலிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் பணியாற்றினார். கி.வா. ஜகந்நாதனை குருவாகக் கருதினார். இசை சார்ந்த பல கட்டுரைகளை *கலைமகளில்* எழுதினார். இசைக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் எழுதினார். அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், மைசூர் சௌடையா, பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை, செம்பை வைத்தியநாத பாகவதர், பிடாரம் கிருஷ்ணப்பா போன்றோரின் வாழ்க்கை வரலாறுகளை எழுதியிருக்கிறார். இசை தொடர்பான வரலாறு மற்றும் நிகழ்ச்சிக் குறிப்புகள் என 300-க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதினார். நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதினார். சில மரபுக் கவிதைகளையும், நாடகங்களையும், சிறார்க்கான படைப்புகளையும் எல்லார்வி எழுதியிருக்கிறார்.

1976ல் நிகழ்ந்த இவரது மணிவிழாவிற்குக் *கலைமகளும்*, *கல்கியும்* நிதி திரட்டி அளித்துக் கௌரவித்தன. 1979ல், எல்லார்வி காலமானார்.

அந்தக் காலத்து இசைக் கலைஞர்கள் பற்றியும், இசை குறித்த வரலாற்று நிகழ்வுகளைப் பற்றியும் மிக அதிகமாக எழுதியுள்ள முன்னோடி எழுத்தாளர் எல்லார்வி.

எழுத்தாளர் சிறுகதை

வாழும் வழி

1938 இல் ஒருநாள்...

விடிகிற வேளை, நிலாப்பாடு சாய்ந்து விட்டது. லேசான இருள் எங்கும் பரவி ஒரு மந்த நிலையை உண்டுபண்ணிக் கொண்டிருந்தது. மெல்லிய காற்றோட்டத்தால் மரங்களில் உள்ள இலைகள் சற்றே அசைந்தாடிச் சலசலத்துக் கொண்டிருந்தன. கைக்கூலி பெறும் ஊழியர்களைப் போலப் புள்ளினங்கள் இங்குமங்கும் ஓடி ஆடிப் பாடிக் கூவி உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் உலகத்தை எழுப்ப முயன்று கொண்டிருந்தன.

குடிசையின்முன் கால் ஒடிந்த கயிற்றுக் கட்டிலில் படுத்து, 'லொக், லொக்' என்று இருமிக் கொண்டிருந்த கிழவன் பஞ்சநதம் மெல்ல எழுந்து உட்கார்ந்தான். இரவிலே அவன் தூங்கின நேரம், விழித்திருந்த நேரம் என்று தனித்தனியாகப் பிரித்துக் கூற வகையில்லாமல் கண்ணை மூடிக் கொண்டும், இருமிக் கொண்டும், புரண்டு கொண்டும், எழுந்து உட்கார்ந்து கொண்டும் இப்படியே பொழுதைக் கழித்திருந்தான். பெரும்பாலும் எல்லா இரவுகளுமே அப்படித்தான் சென்று கொண்டிருந்தன. அவனுக்கு ஏக்கம் - அதுதான் அவனது அந்நிலைக்குக் காரணம்.

அவனது எண்சாண் உடம்பிலே இருந்தது ஒரு சாண் துணிதான். மேலுக்கு ஒரு பீற்றல் சாக்கைப் போர்த்திருந்தான். கடந்த நாலைந்து ஆண்டுகளாக உடல் நலிந்து கிடந்த அவனுக்கு அவனுடைய மகன் நடேசனும், மகள் மரகதமும் ஆதரவாக இருந்து வந்தனர். மனைவி அஞ்சலை போய் நெடுங்காலம் ஆகியிருந்தது.



எல்லார்வி

குடிசை முன்புறத் திண்ணையில் படுத்து உடல் வலியாறக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான் நடேசன். பாவம், பகல் முழுதும் வெயில், மழை, காற்று எதையும் பொருட்படுத்தாமல் உழைக்கும் கட்டை. இரவிலே தன் வசமிழந்து கிடக்கும் உறக்க நேரம்தான் அவனது அலுத்த உடலுக்கு ஆறுதல்.

"ஏலே! தம்பி...!" என்று இருமிக் கொண்டே இரண்டு மூன்று முறை கூப்பிட்டான் பஞ்சநதம். அவனது குரல் நடேசனின் உறக்கத்தைக்

அந்தக் காலத்திலே ஆஞ்சனேயரு கடலைத் தாண்டினாரு, சஞ்சீவி மலையை ஒரே கையிலே தூக்கிக்கிட்டு வந்தாருன்னா இப்போ என்ன ஆச்சு? இந்தக் காலத்திலே அதே ஆஞ்சனேயரு பரம்பரையிலே வந்த குரங்கு, கஞ்சாக்கடை முன்னாலே காலணா பட்டாணிக்குக் குட்டிக் கரணம் போடுது...!"

கலைக்கும் வலுவுடையதாக இல்லை. குரலெடுத்துக் கூப்பிட்ட சிரமத்தில் மீண்டும் இருமலுக்கு அவன் உள்ளானதுதான் மிச்சம். இருமி இருமிக் களைத்தான். 'பாவம், இந்த வயசிலேயே இந்த உழைப்புத் தாங்கல்லே' என்று மனத்திற்குள் அங்கலாய்த்தான்.

அந்த நாளில் பஞ்சநதம் இதே பிராயத்தில் எதற்கும் அயர்ந்து கொடுக்காத நிலையில் இருந்தான். அதைப் பற்றிச் சிறிது நேரம் அவன் சிந்தித்தான்.

"உம்; அந்தக் காலத்திலே ஆஞ்சனேயரு கடலைத் தாண்டினாரு, சஞ்சீவி மலையை ஒரே கையிலே தூக்கிக்கிட்டு வந்தாருன்னா இப்போ என்ன ஆச்சு? இந்தக் காலத்திலே அதே ஆஞ்சனேயரு பரம்பரையிலே வந்த குரங்கு, கஞ்சாக்கடை முன்னாலே காலணா பட்டாணிக்குக் குட்டிக் கரணம் போடுது...!"

இப்படி ஓடிற்று அவன் சிந்தனை. நிம்மதியாகத் தூங்கும் மகனை எழுப்ப அவனுக்கு மனமில்லைதான். தவிர்க்க முடியாத நெருக்கடி அவனை உந்திற்று. எனவே, மீண்டும், "தம்பி...! தம்பி...!" என்று அழைத்தான். அப்போதும் நடேசன் விழித்து எழவில்லை.

குடிசைக்குள்ளிருந்து பெண் குரல் ஒலித்தது.

"அண்ணாத்தைதான் ரொம்பக் களைச்சுப் படுத்திருக்கே, அதை ஏன் எழுப்பணுமாம்?"

"களைப்பாறப் பொறக்கலையே தங்கச்சி நாம?"

"அதுதான் தெரிஞ்சே இருக்கே. அதுக்காவ? இம்மாம் பொழுதிலேயே என்ன வந்திடுச்சாம்"

"பொழுது விடியப் போவுது தங்கச்சி. இல்லாட்டி எழுப்புவேனா?"

"பொழுது... விடியப் போவுதா?"

சில வினாடிகளில் கிழவன் எதிரே வந்தாள் மரகதம்.

அவள் கையில் ஓலைக்கூடை ஒன்றும் புல் அரிவாளும் இருந்தன. கிழவன் அவளைப் பார்த்துப் பெருமூச்செறிந்தான்.

"நீ... இன்னைக்குப் புல்லுக்குப் போக வேணாம் தங்கச்சி."

"ஏன்?"

"உன் அண்ணன் அவசரமா வெளியே போவணும்."

"வாடிக்கையா வைக்கிற புல்லு வைக்காட்டி..."

"அட, இன்னைக்கு ஒரு நாளைக்கு ஏதாச்சும் சால்சாப்பு சொல்லிகிட்டா போவுது. ஏன்னா, அண்ணன் போக வேண்டிய அலுவல் ரொம்ப முக்கியமானது. கோவில் நிலத்தையெல்லாம் ஏழைக்குப் பங்கீடு செய்யப் போறாங்க. எரு, தழை அடிக்கிற வேலையெல்லாம் இன்னைய ஒரே பொழுதோடே சரி. கூடுதலா எரு, தழை அடிச்சவங்க வரிசைப்படி, நிலத்தைப் பங்கிட்டு சாகுபடிக்குக் குடுக்கப் போறாங்களாம். இன்னி ஒரு பொழுது கொஞ்சம் மொனைஞ்சி வேலை செய்துட்டா, வாரப் பசலியிலே நம்ம கயிட்டம் கொஞ்சம் கொறையும். அட, ஓகோகோன்னு இல்லேன்னாலும் அரை வயித்துக் கஞ்சியும், அரை ஒடம்பு துணியுமாவது கிடைக்குமில்லே?"

மரகதம் விரக்தி தோன்ற நகைத்தாள். "போன வருசம் நாயக்கரு நிலத்தெக் குத்தகை எடுக்கற அப்பவும் இப்படித்தான் ஏதேதோ மனக்கோட்டை கட்டினோம். கடைசியிலே வண்டி மாடு முதல் அல்லாமே போயிடுச்சி. கடன்தான் மிச்சம்."

"என்ன செய்யறது? ஆண்டவன் கட்டளை அப்படி இருந்திடுச்சு. ஆனா இந்த வருசம் அப்படி இல்லே. அது குத்தகை: இது வாரம்."

"சரி, அப்போ அண்ணனை எழுப்பவா?"

"எழுப்பு, எழுப்பு."

மரகதம் நடேசனின் அருகில் சென்றாள். குரல் கொடுத்தும், ஓலைக் கூடையால் தட்டி உசுப்பியும் அவனை எழுப்பினாள். நாலு தடவை இப்படியும் அப்படியும் புரண்டுவிட்டு எழுந்து உட்கார்ந்த அவன் செவிகளில் பஞ்சநதத்தின் கரகரத்த குரல் பாய்ந்து உணர்ச்சியை உண்டு பண்ணிற்று.

தெருவில் வந்து நின்று வானத்தைப் பார்த்துக் கொட்டாவி விட்ட நடேசன், "அடாடா...! பொழுது விடிய நேரமாயிடுச்சே!. இன்னங் கொஞ்சம் முந்தியே எழுப்பக் கூடாதா அப்பா?" என்று கேட்டான். அவன் உடலில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. சடக்கென்று திண்ணையிலே பாய்ந்து, தான் படுத்திருந்த கோரைப்பாய், சாக்கு முதலியவற்றைச் சுருட்டி முகட்டிலே செருகியிருந்த கழியிலே இடுக்கிவிட்டு, "தங்கச்சி...!" என்றழைத்தான்.

"அதோ..., வாசப்படியிலே கிடக்கு பாரு, எடுத்துக்க" என்றாள் மரகதம் உள்ளிருந்தபடியே.

நடேசன் வாயிற்படியண்டையில் வந்து பார்த்தான். அங்கே ஒரு துணி கிடந்தது. அதை எடுத்து இடையிலே சுற்றிக் கொண்டான். நாள்தோறும் பழகிப் போன செயலேயானாலும் அவன் உள்ளம் வேதனையால் கசிந்தது.

"நான் போயிட்டு வரேன்" என்று நடையைக் கட்டினான் நடேசன். அவன் சென்றதும் நீண்டதோர் பெருமூச்சுடன் மறுபடி கட்டிலில் படுத்தான் பஞ்சநதம். அவன் உள்ளம் துக்கத்தால் நிரம்பியிருந்தது. பழைய நிகழ்ச்சிகள் நினைவலைகளாக எழுந்து மோதின.

• • •

“உணவுப் பஞ்சத்தையும் மீறியது அச்சிறு குடும்பத்தில் உடைப் பஞ்சம். அது உச்ச நிலையை அடைந்த போது, அந்தக் குடிசையில் உருப்படியாக ஒரே ஒரு சாயத்துணிதான் எஞ்சி நின்றது. ஏனைய கந்தல்களில் தையல் போட இடம் இல்லை; அவை நார் நாராகப் போயிருந்தன.

இன்று ஆய்ந்து ஓய்ந்து செயலற்றுக் கிடக்கும் பஞ்சநதம் அன்று எப்படி இருந்தான்! பத்துக் காணி நிலத்திற்கும் பெரிய ஓட்டு வில்லை வீட்டிற்கும் உரியவனாக ‘ஹோதா’வோடு வாழ்ந்தான். பங்காளிப் போர் தலை நீட்டிற்று. அயலாருடன் தகராறு முளைவிட்டது. ஊர்ப் பொது விஷயங்களில் ஏற்பட்ட பிளவு பேருரு எடுத்தது. பஞ்சநதம் மீசையை முறுக்கின கையை எடுப்பதே இல்லை. இச்சகம் பேசும் நண்பர்களின் தூண்டுகோல் அவனைத் தலைசுற்றி ஆடவைத்தது. வம்பு, வழக்கு, நீதிமன்றம் இடையிடையே அவ்வப்போது வீர கர்ஜனை, அடிதடி - இப்படி என்ன என்னவோ நிகழ்ந்த வண்ணம் இருந்தன. மனக்களத்திலே ஓயாமல் வீசிக்கொண்டிருந்த புயலுக்கு மாற்று எங்கே, எங்கே என்று ஒரு பரபரப்பு. நடேசன் தலையெடுக்கிற வேளையில் பஞ்சநதத்தைக் கொடிய காசநோய் பற்றிக் கொண்டது. படுக்கையைச் சரணடைந்தான்.

நடேசனுக்கு ஒரு பண்ணையில் அரை ஆள் வேலை கிடைத்தது. மரகதமும் அதே பண்ணையில் வீட்டு வேலை செய்யலானாள். பண்ணையார் மகன் அவளைச் சுற்றிச் சுற்றி வந்து இளித்தான். அதைக் கண்ட நடேசன் அவளைப் பண்ணையில் வேலை செய்ய வேண்டாமென்று தடுத்து நிறுத்தினான். இதைப் புரிந்து கொண்ட பண்ணையார் மகன், நடேசன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தினான். “சே பட்டினி கிடந்து செத்தாலும் சரி, இனி அடிமை வேலை செய்வதில்லை” என நடேசன் உறுதி கொண்டான். அன்றாடக் கூலி வேலைக்குப் போய் அகப்பட்டதைச் சம்பாதித்து வந்தான். சில நாள் வேலை கிடைக்கும்; சில நாள் கிடைக்காது. சில சமயம் வேலை கிடைத்தாலும் கூலி சரிவரக் கிடைக்காது. குடும்பத்தில் பல நாள் பட்டினி.

நடேசனுக்கு மனம் சமாதானமாக இல்லை. தகப்பனுடன் கலந்து யோசனை செய்தான். முடிவில் நாயக்கர் நிலத்தைக் குத்தகை எடுத்தான். அது, மேலும் விபரீத நிலையை உண்டு பண்ணிற்று. கண்டிஷன் குத்தகை. உழைத்தவனுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை.

தரித்திரம் வந்தால் சாமானியமாக வருவதில்லையே! அதிலும் அது மானிகளைத்தான் அதிகம் சோதிக்கும். உணவுப் பஞ்சத்தையும் மீறியது அச்சிறு குடும்பத்தில் உடைப் பஞ்சம். அது உச்ச நிலையை அடைந்த போது, அந்தக் குடிசையில் உருப்படியாக ஒரே ஒரு

SINGLE STOP SOLUTIONS FOR ALL YOUR NEEDS

WE ARE READY TO HELP YOU

CGS
CONNECT GLOBAL SERVICES

VISIT US AT
www.ConnectGlobalServices.com
Support@ConnectGlobalServices.com
205-421-1523

OUR SERVICES:

- Property Management
- Travel and Tourism
- Medical Tourism
- Care Giver Services
- Other Services....



ChessKidsNation
Where Chess Champions Come From

Learn Chess openings, Middle game (Tactics, Strategies), and Endgame Techniques from a variety of experienced Chess Coaches from the comfort of your home.

Contact us to schedule a **FREE** evaluation and choose an online Chess Coach to match your level.

Visit **www.ChessKidsNation.com** to learn more about us and our students' achievements.

Subha Balagee
Contact@ChessKidsNation.com
205.421.1523

Swami Insurance Services



Ganapathy Swami
(Independent Licensed Insurance Agent)
510-590-2144*
ganapathy_94539@yahoo.com

SIS

Life Insurance
Health Insurance
Medicare Plans
Long Term Care

CA Lic#: 0C74438
This is a solicitation for insurance.
**Calling this number will direct you to a Life & Health Insurance Agent*



தெய்வத்திரு
திருமுருக
கிருபானந்தவாரியார்
சுவாமிகளின்
மகத்துவமிக்க
சொற்பொழிவுகளை
கண்டு கேட்டு
இன்புற வேண்டுமா?

JioSaavn Spotify
WYNKMUSIC Listen on MUSIC
YouTube Music amazon music

மேற்காணும் தளங்களில் பார்த்து, கேட்டு மகிழுங்கள்!

குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்
132/107, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-2845 7666 Email : guhashri@gmail.com
www.variyarswamigal.com

Reach communities Local & Nationwide effectively

ADVERTISE IN THENDRAL

The Pride of Asian Indian Publications - in our 25th year

408.245.0193 ● thendral@tamilonline.com

சாயத்துணிதான் எஞ்சி நின்றது. ஏனைய கந்தல்களில் தையல் போட இடம் இல்லை; அவை நார் நாராகப் போயிருந்தன.

கிழவன் தான் படுக்கையிலே கிடக்கிறான், வெளியிலே நடமாடக் கூடியவர்கள் நடேசனும் மரகதமும்தான். இருப்பது ஒரே துணி. சில வீடுகளுக்குப் புல் வைக்க ஒப்புக் கொண்டிருந்தாள் மரகதம். விடிவதற்குள் அவள் போய்க் கூடையையும் நிரப்பி இரண்டு கட்டுக்களும் கட்டிக் கொண்டு வாடிக்கை வீடுகளில் அவற்றை வைத்துவிட்டு வருவாள். அவள் வந்தபின் வேலைக்குப் போவான் நடேசன். மரகதம் கந்தல்களை இணைத்து உடம்பிலே சுற்றிக் கொண்டு குடிசைக்குள் அடைந்து கிடப்பாள். நடேசன் வீடு திரும்பின பிறகுதான் அவள் குடிசையிலிருந்து வெளிவர முடியும். இப்படியும் உண்டா என்றால் இருக்கத்தான் இருந்தது. பிடி சோறு கிடைக்காமல் உயிர் நீத்தவர்கள் இல்லையா?

கோயில் நிலத்தையெல்லாம், பண்ணையைக் கலைத்து வார சாகுபடிக்குப் பிரித்து விடப் போவதாகக் கேள்விப்பட்ட பஞ்சநதம் ஆவல் மீதுர மகனின் கைத்தாங்கலில் தள்ளாடி நடந்து தர்மகர்த்தாவிடம் சென்றான். பணிவுடன் பேசித் தன் குடும்ப நிலையை விளக்கினான். இரக்கம் கொண்ட தர்மகர்த்தா நடேசனின் உழைப்பை நம்பிக் கிழவனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். சாகுபடிக்கு நிலம் தருகிறேன் என்றார். ஆனால் ஒரே நிபந்தனை; மறுநாள் பொழுதுக்குள் நிலங்களில் யார் மிகுதியாக எரு அடிக்கிறார்களோ அவர்களின் வரிசைப்படி நிலத்தைப் பிரித்துக் கொடுக்கும் சலுகை விதிக்கப்பட்டிருந்தது. வண்டி, மாடு, எரு எல்லாமே தேவஸ்தானத்தில் இருந்தன. உழைப்பும் ஊக்கமுமே போட்டியின் எடுத்துக்காட்டுகள். இதை மனத்திலே கொண்டு தான் மகனை அவசரமாக எழுப்பினான் பஞ்சநதம். மரகதமும் தான் புல் அறுக்கச் செல்வதை நிறுத்திக் கொண்டு அண்ணனை அனுப்பி வைத்தாள். பழகிப் போன செயலேயாயினும் நடேசன் வேதனை கொண்டது போல் கிழவனும் வேதனைப்பட்டான். வயசுப்பொண்ணு தன்னோடொத்த பொண்ணுவளோட, புள்ளிமானப் போல துள்ளி விளையாட வேண்டிய நாளிலே... கந்தலை உடுத்து குடிசைக்குள்ளாற அடைபட்டுக் கிடக்க... நானல்லவா காரணம்...!" என்று எண்ணி எண்ணி மனம் புண்ணானான்.

• • •

கதிரவனின் இளங்கிரணங்கள் பட்டதனால் கிழவனின் சிந்தனை கலைந்தது. போர்வையை விலக்கிக் கொண்டு மெல்ல எழுந்து உட்கார்ந்தான்.

தொலைவில் வயல் வெளியில் ஏதோ பெருத்த கூக்குரல் கேட்டது. தன் மகனுக்கு ஏதாவது... என்று கலங்கி விட்டான் கிழவன். எதுவானால் என்ன செய்ய முடியும்? எழுந்து செல்லத் திராணி இல்லை. தெய்வமே கதி என்று மீண்டும் படுக்கையில் வீழ்ந்தான்.

சிறிது நேரத்திற்குப் பின் குடிசை வாயிலில் பேச்சுக் குரல் கேட்டது. கிழவன் தலை தூக்கிப் பார்த்தான். இரண்டு பேர் கூடி ஓர் ஆளைச் சுமந்து வந்திருந்தனர். பஞ்சநதம் பதறிப் போனான். அடிபட்டு மயக்கமுற்றிருக்கும் ஆள் நடேசன் இல்லை



என்பதை அறிந்ததும் பதற்றம் சிறிது குறைந்தது.

வந்தவர்களில் வயது முதிர்ந்த குடியானவன், கொண்டு வந்த ஆளைக் குடிசைத் திண்ணையிலே கிடத்தினதும், 'சாமி, நீங்க இவனைக் கவனிச்சுக்குங்க; நான் அங்கே போயி அந்தப் படுபாவிப் பயலுவளைக் கவனிக்கிறேன்" என்று கூறி வேகமாகச் சென்றான். கதர் உடை அணிந்திருந்த வாலிபன் கரங்கூப்பி அவனுக்கு விடையளித்தான். பிறகு பஞ்சநதத்தின் பக்கம் திரும்பி, "ஐயா..." என்று மெல்ல அழைத்தான். "கொஞ்சம் தண்ணீர் வேண்டும் என்றான்.

"நீங்க யாரு...? இந்த ஆளுக்கு என்ன?" இருமல்களிடையே திணறிக் கொண்டு கேட்டான் பஞ்சநதம்.

நான் வெளியூர்க்காரன். காந்தியடிகளின் அடியார்கள் தோற்றுவித்த சமத்துவ சமதர்ம சேவா சங்கத்தின் ஊழியர்களில் ஒருவன். இவ்வூர்ப் பிரமுகர் வேதாசலத்திடம் நன்கொடை பெற வந்தேன். வழியில் சிறு கலகம். கோயில் நிலங்களில் எரு அடிப்பதிலே தகராறு முற்றி அடிதடி. இந்த ஆளின் தலையில் சரியான அடி விழுந்ததால் இவர் நினைவிழந்துவிட்டார்.

உள்ளே இருந்த மரகதத்தால் இதைக் கேட்ட பின்னும் உள்ளே இருக்க முடியவில்லை; வெளியே வரவும் முடியவில்லை. ஓலைத் தட்டிக் கதவின் அருகே வந்து

நின்று மெல்ல எட்டிப் பார்த்தாள்; அங்கலாய்த்தாள். ஊழியன் அவள் பக்கம் திரும்பியதும் சட்டென்று பின் வாங்கி மறைந்தாள்.

பஞ்சநதம் தர்மசங்கடத்தில் தவித்தான். பின்னர் நெஞ்சை அழுத்திக்கொண்டு துயரத்துடன் சொன்னான்: "ஐயா, நான் நடக்க மாட்டாதவன். வீட்டிலும் யாரும் இல்லை..." என்று தழுதழுத்தான். மரகதம் தட்டி மறைவில் வந்து நின்று எட்டிப் பார்த்ததையோ, ஊழியன் அவள் பார்த்ததைக் கவனித்ததையோ அறியவில்லை.

"எ...ன்...ன... வீட்டிலே... யாருமே... இல்லையா...?"

ஊழியன் இவ்வாறு கேட்டதும் பஞ்சநதத்தை இன்னொரு கவலை பிடித்தது. "ஆமாமுங்க. நீங்களே உள்ளாற போயி தண்ணி எடுத்துக்கிடலாமின்னா... அதுக்குங்கூட வகை இல்லே; உள்ளே தண்ணியே இல்லே. வெளியே போயிருக்கிற என் மவன் வந்தாத்தான் தண்ணி" என்றான்.

ஊழியனின் உள்ளத்திலே ஆத்திரம் பிறந்தது. ஆனாலும் அதைச் சிரிப்பாக மாற்றிக் கொண்டு சொன்னான்:

"அடிகளாரின், 'அஹிம்சா; பரமோதர்ம;' 'சத்தியமேவ ஜயதே' முதலிய பொன்மொழிகளை ஏற்று அதன்படி ஒழுகி மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பது எங்கள் சங்கத்தின் கொள்கை. சாந்தம் வேண்டும், பொறுமை வேண்டும். உங்களைப் போன்றவர்களின் செயல்கள் எங்களைப் போன்றவர்களின் பொறுமையைச் சோதிப்பனவாக இருக்கின்றனவே! ஏனையா, உயிர் போகும் தறுவாயில் உள்ளவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூட மனமில்லாத நீரும் ஒரு மனிதரா? வீட்டில் யாருமே இல்லை என்று நெஞ்சாரப் பொய் சொல்லுகிறீரே, உண்மையில் உள்ளே யாருமே இல்லையா?"

"இ...ல்...லை. இ...ரு...க்...கா...ங்...க... ஆனா... வெளியே... வர மாட்டாங்க..."

"என்...ன...! வெளியே வரமாட்டாங்களா? இம்மாதிரி ஆபத்துக் காலத்தில் கூட உதவாமல் அப்படி ஒரு கோஷாவா? இதே இடத்தில் உம்முடைய மகனோ, மருமகளோ அடிபட்டுக் கிடந்தால் நீர் இப்படிப் பேசுவீரா?"

'சுரீர்' என்றது கிழவனுக்கு. அவன் கண்களில் நீர் தளும்பிற்று.

"கோசாவுமில்லை... மண்ணாங்கட்டியுமில்லீங்க, அப்பறமா வெவரஞ் சொல்றேனுங்க, நீங்க கொஞ்சம் தெருப் பக்கமா திரும்பி கண்ணெ மூடிக்குங்க"

அந்த யுவன் அவ்வாறே செய்தான். உடனே கிழவன் சற்று உரத்த குரலில், "ஒரு குவளையிலே தண்ணிகொண்டா தங்கச்சி" என்றான்.

மரகதம் தண்ணிக் குவளையை உள்ளிருந்தபடியே வாயிற்படி ஓரத்தில் வைத்துவிட்டு மறைந்தாள். கிழவன், "ஐயா தண்ணி வச்சிருக்கு பாருங்க" என்றான்.

வியப்பில் மூழ்கியிருந்த யுவன் கண்ணைத் திறந்தான். மறுபுறம் திரும்பினான். தண்ணீரை எடுத்தான். அடிபட்டவன் முகத்தில் தெளித்தான். அவன் நினைவு பெற்றான். தண்ணீரைப் பருகிக் களை

தெளிந்தான். எழுந்து நின்று நாற்புறமும் நோக்கினான். நிலையை ஊகித்தான்.

"ஐயா, நான் சண்டை போட்டது என் சித்தப்பாரோடே; என்னை அடிச்சது அவரோட மவன், என்னை என் வீட்லே கவலையோட தேடுவாங்க, நான் வர்ரேன் சாமி" என்று அவன் கிளம்பினான்.

"எங்கே போகிறாய்? சண்டை நடந்த இடத்துக்கா?"

"சாமி சத்தியமா நான் அங்கே போவலிங்க!" என்றவன், திண்ணையினின்றும் இறங்கி வேகமாக நடையைக் கட்டினான்.

"ஐயா..." பஞ்சநதம் அழைத்தான், யுவன் திரும்பிப் பார்த்தான். "இப்படி வந்து குந்துங்க. என்னாலே பேச முடியல்லே. ஆனாலும், நான் ஈவிரக்கமத்த பாவின்னு உங்க மனசிலே பட்ட கெட்ட நினைவைப் போக்கணுமே. இப்படி வாங்க" என்றான் கிழவன்.

யுவன் அவன் அருகில் சென்று அமர்ந்தான். பஞ்சநதம் தன் கதையை அடியிலிருந்து சொன்னான். அனைத்தையும் ஒளிக்காமல் சொன்னான். அன்றைய நிலைவரையில் சொன்னான்.

அனைத்தையும் கேட்கக் கேட்கச் சிலைவடிவாய் மாறிவிட்ட வாலிபன் கதை முடிந்ததும் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டான். உணர்ச்சி அவன் வாயைக் கட்டி விட்டது. திடீரென்று எழுந்தான். "நான் போய்விட்டு மாலையில் வருகிறேன்" என்று நடந்தான்.

நெட்டுயிர்த்த பஞ்சநதம் தட்டுத் தடுமாறி எழுந்து உள்ளே போனான். பல்

"இப்படி வந்து குந்துங்க. என்னாலே பேச முடியல்லே. ஆனாலும், நான் ஈவிரக்கமத்த பாவின்னு உங்க மனசிலே பட்ட கெட்ட நினைவைப் போக்கணுமே. இப்படி வாங்க"

விளக்கிக் கூழ் குடித்தான். தந்தையும் மகளும் அன்றைய நிகழ்ச்சி பற்றி பேசிக் கொள்ளலானார்கள். பொழுது சென்றுகொண்டிருந்தது.

மாலை வந்தது. குடிசை வாயிலில் சைக்கிள் மணி கிணுகிணுத்தது. காலையில் வந்து சென்ற வாலிபன்தான் வந்தான். அவன் கையில் ஒரு பொட்டணம்: அதில் கதர் ஆடைகள். சைக்கிளின் பின்னே கட்டியிருந்த சர்க்காவையும் பஞ்சுப் பொட்டணத்தையும் இறக்கித் திண்ணையிலே வைத்தவன் நூல் நூற்கத் தொடங்கினான். "உங்கள் மரகதம் இதைச் செய்யட்டும்; உடைப் பஞ்சம் மட்டுமன்று; உணவுப் பஞ்சமும் பறந்தே போய்விடும்" என்றான். அவன் கொணர்ந்த ஆடையை உடுத்திய மரகதம் அவனை வணங்கிச் சர்க்காவைப் பக்தியுடன் பெற்றுக்கொண்டாள். காந்தி மகான் ராட்டை சுற்றும் படத்தைக் குடிசையிலே மாட்டிவிட்டு விடைபெற்றுச் சென்றான் வாலிபன்.

அமெரிக்கா

பரத நாட்டியத்தில் ஒரு குறை

வ.ரா.

எனக்கு ரொம்ப நாள் ஆசை. எதிலே? பரத நாட்டியம் பார்ப்பதிலே. சுமார் இருபது வருஷங்களுக்கு முன், அதை நான் அடிக்கடி பார்ப்பதுண்டு. பின்னாலே அதற்குக் கால தேச வர்த்தமானங்கள் இடம் கொடுக்கவில்லை. அதைப் பற்றி நான் கவலைப் பட்டதுமில்லை. காரணம் என்ன? நமது நாடு இப்பொழுது இருக்கிற நிலைமையிலும், நமது நாட்டாரின் தற்போதைய மனோநிலையைக் கருதியும், பரதநாட்டியம் பார்க்காததைப் பற்றி நான் வருந்த வேண்டியதில்லை என்று அப்பொழுது நான் தீர்மானங் கொண்டேன். அந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளக் காலமும் காரணமும் வந்துவிட்டனவா என்று ஆராய்ந்து பார்க்கும் பொருட்டு, சென்ற ஞாயிறன்று, சென்னை தம்புச் செட்டி வீதியில் அமைக்கப் பெற்றிருக்கும் 'கான மந்திர'த்துக்கு பாலசரஸ்வதியின் நாட்டியத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

'கான மந்திர'த்தில் காலியிடமே இல்லை. இரண்டு பங்கு ஆண்பிள்ளைகளும் ஒரு பங்கு பெண்பிள்ளைகளும் வந்திருப்பார்கள். இருபத்துநான்கு வயதுள்ள இங்கிலீஷ் இளைஞன் ஒருவன் தமிழனைப் போல் வேஷ்டி கட்டிக்கொண்டு, நாட்டியம் பார்க்க வந்திருந்தான். கனம் சீனிவாச சாஸ்திரியார் வந்திருந்தார். கனம் நீதிபதி வெங்கடசுப்பாராவ் தமது தர்மபத்தினியுடன் விஜயம் செய்திருந்தார். வெள்ளைக்கார தம்பதிகள் இருவர் வந்திருந்தனர்.

கனம் சீனிவாச சாஸ்திரியாரோடு தமிழ்ப் பெண்ணைப் போல உடை தரித்துக்கொண்டு, வெள்ளைக்கார ஸ்திரீ ஒருவர் வந்திருந்தார். எத்தனையோ உத்தியோகஸ்தர்களும் வக்கீல்மார்களும் டாக்டர்களும் வந்திருந்தார்கள். ஒன்று விடாமல் புரண்டி எறிய பத்திரிகை நிருபர்களும் ஆசிரியர்களும் வந்திருந்தார்கள். கான மந்திரத்துக்கும் பால சரஸ்வதிக்கும் (வீணை தனத்தின் பேத்தி) உள்ள கிராக்கியையும் பெருமையையும் அதிகமாய் வர்ணிக்க வேண்டுமா?



தொகுப்பு:
அரவிந்த்

Komala Vilas

serving you for over 21 years





Breakfast	Lunch	Dinner
8:30am till 11:30am	12:00am till 2:30pm	5:30pm till 9:30pm
Idly, Vadai, Variety of Dosas, Uppuma and many more	Every day different menu, We serve traditional lunches	Dinner is a la carte with Tiffin and variety rice.

If the food and service are good let your friends know about them
Otherwise bring it to our attention

We cater for any function such as: Seemandham, Poonal, Weddings, House Warming, Birthdays, etc.

பருப்பு தேங்காய் தேன்குழல்
Freshly made
South Indian style Laddu
South Indian style Mixture
Sweet Poli, etc.

available at
Komala Vilas.

408.733.7400



Hours:

Mon, Wed thru Friday:
8:30am to 2:30pm, 5:30pm to 9:30pm
Saturday and Sunday
8:30am to 11:30am (Breakfast)
12:00noon to 2:30pm (Lunch) 5:30pm to 9:30pm (Dinner)

Unlimited Lunch
Back on popular demand

Komala Vilas

Where taste meets tradition.

1020 E El Camino Real (El Camino Real & Henderson)
Sunnyvale CA 94087

Tel: 408.733.7400



அங்கு கூடியிருந்தவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேர்கள், என்னைப் போல, நாட்டிய சாஸ்திரம் அறியாதவர்கள். கானத்தையும் நிருத்திய அபிநயத்தையும் அனுபவிப்பதற்கு, எங்கள் கண்களும் காதுகளும்தான் கருவிகள். என்னைப் பற்றிச் சொல்லிவிட்டால், அது அவர்களையும் பற்றிச் சொன்னதாகத்தான் ஆகும். சில்லறை வித்தியாசங்கள் சில இருக்கலாம். எதிலும் பூரண ஒற்றுமை இருக்க முடியாது என்று உங்களுக்குத் தெரியாதா? நான் கண்ட காட்சியையும் எனது அனுபவத்தையும் சிறிது சொல்லுகிறேன். பொறுமையுடன் கேளுங்கள்...

முதலிலே எனக்கு நேர்ந்த ஆபத்து என்னவெனில், சர்வகலாசாலை லைப்ரரியன் ஸ்ரீமான் எஸ்.ஆர். ரங்கநாதன் எனக்கு அந்த ஆங்கில இளைஞனை அறிமுகப்படுத்தி வைத்து, அன்றைய நிகழ்ச்சி சம்பந்தமாக எல்லா விஷயங்களையும் அவருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லும்படியாக என்னை வேண்டிக்கொண்டு, தமது ஆசனத்துக்குப் போய்விட்டார். நான் நாட்டியத்தைக் கவனிப்பதா அல்லது அந்த இளைஞனுக்கு வியாக்கியானம் செய்துகொண்டிருப்பதா? மேலும் அந்தப் பேர்வழியோ தானாகச் சந்தேகம் கேட்கிற ஆளாகத் தோன்றவில்லை. அவனை வம்புக்கிழுத்து வியாக்கியானம் செய்வதிலும் எனக்கு இஷ்டமில்லை. தெலுங்குப் பாட்டுகளிலே எனக்கு சிரத்தையும் கிடையாது. ஏன், பாட்டில் பாஷை புரிவதில்லை.

பரத சாஸ்திரத்திலே மூன்று அம்சங்கள். இது நானாகப் பிரித்தது, சாஸ்திரம் எப்படி முறையிடுகிறதோ அது எனக்குத் தெரியாது. தாளத்தை ஓட்டி நாட்டியம். இதற்குக் கருத்தழகு தழுவிய பாட்டுத் தேவையில்லை. இதற்கு சுரமும் தாளமும் தேவை. நல்ல கைவரிசை, கால்வரிசைப் பழக்கம் அதிகம் இருக்கவேண்டும். சதிர், தாளத்துக்கும் சுரத்துக்கும் தப்பிப்போனால், பார்க்கிறவர்களின் மண்டையில் அடி விழுந்தது மாதிரி இருக்கும். பாட்டிலே

குறிப்பிடப்படும் கருத்துக்கேற்ற அபிநயம், அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டிய சங்கதி. பாட்டிலே குழந்தையைத் தழுவி முத்தமிடுவதாகக் கூறப்பட்டால், அதை அபிநயச் செயலில், அபிநய ஜாடையில், அபிநயக் குறிப்பில் காட்டவேண்டும். அபிநயத்துக்குப் பின்னேயிருப்பது பாவம். முத்தமிடுகிற உயிர் பாவத்தை முகத்தில், தேகம் முழுவதிலும் காண்பிக்க வேண்டும். நாட்டியத்தையும் அபிநயத்தையும் சாஸ்திர முறை பிசகாமல் செய்துவிடலாம். பாவம் என்பது அவரவர் மனோதர்மத்தையும் யுக்தி சாமர்த்தியத்தையும் பொறுத்ததாகும். வித்வானுடைய தனி மேதையை, கடைசியில் சொன்னதைக் கொண்டுதான் கணக்கிட முடியும்.

சிறு பையனும் எண்சுவடி வாய்பாட்டைத் தலைகீழாய்ச் சொல்லிவிடுவான். கணக்கிலே வாய்பாட்டை உபயோகப்படுத்துவது அவனுக்குச் சிரமம். ஆடுகிறதும், அபிநயம் பிடிப்பதும் பழக்கத்தால் எளிதிலே கைகூடக் கூடியவை. பாவம்தான் கஷ்டம். அதற்குச் சிறிதளவேனும் கவிதா ஆவேசமும், கற்பனா சக்தியும், மெழுகைப்போல உருகி ஒட்டிக் கொள்ளும் உள்ளமும் வேண்டும். இதைத்தான் இங்கிலீஷிலே *(Artist)* 'ஆர்டிஸ்ட்' கவிச்சித்திரகாரன் என்கிறார்கள். தமிழில் நேரே எனக்கு வார்த்தை அகப்படவில்லை.

'கான மந்திர'த்தில் அன்று ஆடிய பாலசரஸ்வதி நல்ல கவிச்சித்திரகாரி என்பதில் சந்தேகமில்லை. மன்மத பாணம் காதலியின் உடலில் பிரவேசம் செய்ததை, அவள் அபிநய பாவத்துடன் காண்பிக்கையில், சபையார் கலகலவென்று கைகளைக் கொட்டி உடல் பூரிப்பு அடைந்தார்கள். கனம் சீனிவாச சாஸ்திரியாரின் முகம் மலர்ந்தபடியே இருந்தது. பக்கத்திலிருந்த பாலக்காட்டு இளைஞன் ஒருவன், என் தொடையை, அவன் அறியாமலே ஒரு திருகு திருகிக் கிள்ளினான், அவன் கையோடு துண்டுச் சதை வந்து விடுமோ என்று சந்தேகப்பட்டேன். கூடவந்த நண்பர் ஒருவர், கால எல்லையையும், சபை நிகழ்ச்சியையும், சபையாரையும் சிறிதும் லட்சியம் செய்யாமல், என் முதுகின் பேரில் தாளம் போட்டுக் கொண்டேயிருந்தார். பார்த்த கண் பூத்துப் போகும் படியாக, சபையார் அனைவரும், பாலசரஸ்வதியை நோக்கிய வண்ணமா யிருந்தார்கள். "ரொம்ப கெட்டிக்காரி!" என்றான் இங்கிலீஷ் இளைஞன்.

இதுவரையிலும், நான் சொல்லி வந்ததில் ஒருவருக்கும் கோபமாவது வருத்தமாவது வராது. இனிமேல்தான் எனக்கு மனவேதனை; படிக்கிறவர்களுக்கும் கஷ்டம், அன்றைக்குப் பாடின பாட்டுகளிலே, மூன்று ரஸங்கள் இருந்தன. ஹாஸ்ய ரஸம், பக்தி ரஸம், சிருங்கார ரஸம். சோக ரஸம் இல்லை, வீர ரஸத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை. அதை இந்த நாட்டிலே, கார்த்திகைப் பிறையைப் போல, காணுவது அருமை. மற்ற ரஸங்களைப் பற்றி எவரும் கவலைப்படுவதுமில்லை; அவைகள் எழுத்தில் மட்டும் இருக்கின்றன. அனுபவத்தில் கிடையாது.

மேலே முதலில் மூன்று ரஸங்களைச் சேர்த்துச் சொன்னேனே, அவைகள் பாட்டிலும், அபிநயத்திலும் சிருங்காரமாகவே உருவம் பெறுகின்றன. பக்தியை, நாயக-நாயகி பாவமாகப் பாவித்துப் பாடும்வரையில் அதற்குச் சிருங்கார ரஸ ஆபத்து உண்டு.

சிருங்கார ரஸத்தின் மூலமாய் கலியுகமும், நிலைத்த கெட்ட பெயரையும் வாங்கிக்கொண்டுவிட்டது. ஒருமனப்பட்டு, சோர்வில்லாமல் உழைத்துக் காரியங்களைச் செய்யும் வல்லமை நம்மவர்களிடம் இல்லை. சதா களைப்பும், சோர்வும், ஏக்கமும் நம்மிடத்தில் குடிகொண்டிருக்கின்றன.

தெய்வத்தன்மை பொருந்திய காதலை பாரதியார் வர்ணிக்கும் பொழுதே, ஆபாஸச் சிருங்கார ரஸத்தில் அவர் வீழ்ந்துவிட்டதாகத் காலஞ்சென்ற வீரர் வ.வெ.சு. அய்யர் சந்தேகித்து எழுதியிருக்கிறார்.

நம்மில் பெரும்பாலர் உடலும் உள்ளமும் வலிமை குறைந்து வாழ்ந்து வருகிறார்கள். இதைக்கூட ஆட்சேபிப்பவரும் இருப்பார்களா? சிருங்கார ரஸத்தின் மூலமாய் கலியுகமும், நிலைத்த கெட்ட பெயரையும் வாங்கிக்கொண்டுவிட்டது. ஒருமனப்பட்டு, சோர்வில்லாமல் உழைத்துக் காரியங்களைச் செய்யும் வல்லமை நம்மவர்களிடம் இல்லை. சதா களைப்பும், சோர்வும், ஏக்கமும் நம்மிடத்தில் குடிகொண்டிருக்கின்றன. சங்கீதக் கச்சேரிகளிலோ, வித்வான்கள் தமிழ்ப் பாட்டுகள் பாடுவதை கௌரவக் குறைவாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தெலுங்கு, ஹிந்துஸ்தானி பாட்டுகள் நிறைந்த சங்கீத நாட்டியக் கச்சேரிகளில் தமிழர்களுக்கு என்ன வேலை? அவர்களுக்கு என்ன புரியும்? அவர்களால் என்ன ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்?

நாட்டியக் காலத்தில், என் முதுகையும் தொடையையும் பறிகொடுத்த பின்னரும், சபையார் மன்மத பாண அபிநயத்தைக் கண்டு ஆரவாரம் செய்த கோலாகலத்தைக் கண்குளிர நான் பார்த்த பின்னரும், சிருங்கார ரஸம் ஒன்றே நாட்டியத்தில் மிஞ்சிக் கிடப்பதை, நேரில் மீண்டும் ஒரு முறை, இருபது வருஷங்களுக்குப் பின்னர், சந்திக்க நேர்ந்ததன் பின்னரும், எதிலும் நிதான மிதவாத நிபுணரான, மகாபுத்திசாலிக் கிழவரான கனம் சீனிவாச சாஸ்திரியாரின் முகவிலாசம் பட்ட பாட்டை நான் பார்க்கக் கொடுத்துவைத்ததன் பின்னரும், மகாத்மாவின் இருபத்தோரு நாள் உபவாசத் தவமும் பாலசரஸ்வதியின் சிருங்கார ரஸ அபிநயத்தின் முன்னே பெயர் சொல்லாது என்று உறுதியான முடிவுக்கு நான் வருவது முடியாத காரியமா? அடியேன் பேச்சு அம்பலம், இப்பொழுது ஏறாமலிருக்கலாம். பரத சாஸ்திரம் ஒரு நாளும் அழிந்து போகாது. தற்போது சிருங்கார ரஸம் ததும்பும் பரதநாட்டிய அபிநயம் இப்பொழுது நாட்டுக்குத் தேவையில்லை. கூடாது என்பது எனது தாழ்மையான கருத்து. எனது பழைய அபிப்பிராயம் மாறவில்லை. காசு கொடுத்து டிக்கட் வாங்கினது தவறு. உங்களுக்கு என் மனதை வெளிவிட்டுச் சொன்னதுதான் லாபம்.

நன்றி: வ.ரா. எழுதிய 'மழையும் புயலும்' நூல்:
https://tinyurl.com/va-ra-natyam

சிறப்புப் பார்வை



டாக்டர் விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன்



உரையாடல்:
அரவிந்த

நாட்டுப்புறப் பாடல்களை, கலை வடிவமாக மக்களிடம் கொண்டு செல்வதில், கணவர் டாக்டர் எம். நவநீதகிருஷ்ணனுடன் இணைந்து முக்கியப் பங்காற்றியவர் டாக்டர் விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன். நாட்டுப்புறப் பாடகர், நாட்டுப்புறப் பாடல் தொகுப்பாளர், நாட்டுப்புறப் பாடல் ஆய்வாளர் எனப் பல திறக்குகளில் செயலாற்றி வருபவர் இவர். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறக் கலை மற்றும் பண்பாட்டுத்துறையில் பேராசிரியராக 25 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழக அரசின் கலைமாமணி, இந்திய அரசின் பத்மஸ்ரீ ஆகியவற்றைப் பெற்றுள்ளார். அவரது வாழ்க்கைப் பக்கங்களை அறிந்துகொள்வோமா?

விஜயலக்ஷ்மி, ஜனவரி 27, 1946 அன்று விருதுநகர் மாவட்டத்தின் ராஜபாளையத்தில் உள்ள சின்னசுரைக்காய்ப்பட்டியில், பொன்னுச்சாமி - மூக்கம்மாள் இணையருக்குப் பிறந்தார். மதுரையில் பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி கற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில், 'ஆழ்வார் பாடல்களில் நாயக நாயகி பாவனை' என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றார். நாட்டுப்புறக் கலைத் துறையில் தனது புலமைப் பணிக்காக முனைவர் பட்டம் பெற்ற தமிழ்நாட்டின் முதல் நாட்டுப்புறக் கலைஞர் விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன்

விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் ஆழ்வார்கள் மீதும், ஆண்டாள் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவராக இருந்தார். குறிப்பாக ஆண்டாளைத் தனது மானசீக குருவாகக் கொண்டு இயங்கினார்.

தான். கல்விக்குப் பின் மதுரை மீனாட்சி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். தொடர்ந்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் வாய்ப்பு வந்தது. அங்கு நாட்டுப்புறக் கலை மற்றும் பண்பாட்டுத்துறையில் பேராசிரியராக 25 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றி ஓய்வுபெற்றார். கணவர் டாக்டர் எம். நவநீதகிருஷ்ணன், அதே மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் நாட்டுப்புறக் கலை மற்றும் பண்பாட்டுத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றினார். இருவரும் நாட்டுப்புறவியல் ஆய்வுகளை மேற்கொண்டே முனைவர் பட்டங்களைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இருவரது வாழ்க்கையும் நாட்டுப்புறக் கலையால் ஒருங்கிணைந்தது. இருவரும் இணைந்தே பல நாட்டுப்புற நிகழ்ச்சிகளை நடத்தினர். விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் ஆழ்வார்கள் மீதும், ஆண்டாள் மீதும் மிகுந்த பற்றுக்

Balagan Business & Tax Service

Serving all States from our Nation's Capital **BBT**



AICPA PEER REVIEWED Audit Firm

- Accounting and Bookkeeping Service
- Audit, Review, Compilation and Attestation Service
- Tax Service
- IRS Solutions
- Web Hosting
- ERP / CRM Integration
- Business Consultancy
- Dedicated Service with Smiling Faces
- Experienced and Reliable Staff Year Around
- Rely on 24 Years of Experience

Balagan Arumugaswamy, CPA., LL.M

தமிழ் மக்களுக்கு எங்களது நல்வாழ்த்துக்கள்

Tel: 703.723.4488, 703.723.4458, 301.931.1040, 301.931.1042
Fax: 703.723.1140, 301.595.4332

Email: balagancpa@msn.com
Web: www.balaganfinancials.com

Balagan Business & Tax Service
Main Office: 12100 Franklin Street, Beltsville, MD 20705
Branch Office:
- 44335 Premier Plaza, Suite #100, Ashburn, VA 20147
- 14701 Lee Highway, Suite #203, Centreville, VA 20121

JESSIE TAX SERVICES



SERVICES AVAILABLE

- Individual Income Tax Preparation with Worldwide Income, Multi-State
- Corporate, Partnerships, LLC'S Income Tax Preparation.
- NRI Taxes
- Full Accounting Services: Bookkeeping, Payroll, Sales Tax
- IRS, FTB, Sales Tax, EDD Audits representation
- New Business Start-Up
- Tax Advise / Consultation.

OUR GOALS

- Minimum Tax
- Reasonable Charges
- Open All Year Around
- Client Satisfaction
- Extended Hours During Tax Season
- Solve Tax Problams

JASWANT S. JESSIE,
Enrolled Agent (EA), NTPI Fellow



1491 S. Wolfe Road, Sunnyvale, CA 94087
408.736.2451

Fax: 408.736.8626
Email: jessie@jessietax.com
Web: www.jessietax.com



கொண்டவராக இருந்தார். குறிப்பாக ஆண்டாளைத் தனது மானசீக குருவாகக் கொண்டு இயங்கினார். ஆண்டாள் தன் கனவில் வந்து கூறியதற்கேற்ப நாட்டுப்புறவியல் சார்ந்ததாக தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி ஆராய்வதும், சேகரிப்பதும், தொகுப்பதும், பதிவு செய்வதும், ஒலிப்பேழைகளாக வெளியிடுவதும் முக்கியப் பணிகளாகின. கணவர் நவநீதகிருஷ்ணன் அதற்கு உறுதுணையாக இருந்தார். இருவரும் இணைந்தே அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டனர்.

விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன், கிராமியக் கலைகளை முறையாக ஆவணப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் கணவருடன் இணைந்து பல்வேறு கிராமங்களுக்குப் பயணப்பட்டார். பலரைச் சந்தித்தும், நேர்காணல் செய்தும் கிராமப்புறங்களில் வாய்மொழியாக மட்டுமே இருந்த பல பாடல்களைச் சேகரித்தார். அந்தப் பாடல்களுடன், கணவருடனும் தன் மாணவிகளுடனும் இணைந்து தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய பல்வேறு இசைத்தொகுப்புகளைத் தேடித் தொகுத்துப் பதிவு செய்து வெளியிட்டார்.

நாட்டுப்புற இசைப் பாடல்கள், நாட்டுப்புறக் கலைகள், கூத்துகள், நாடகவியல் போன்ற கலைகளை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார். பல இளங்கலைஞர்களை உருவாக்கினார். தன் மாணவர்களைக் கொண்டு பல நாட்டுப்புற ஆடல், பாடல் நிகழ்ச்சிகளை இந்தியாவின் பல மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் நடத்திப் புகழ்பெற்றார். தமிழ்நாட்டின் ஆலயத் திருவிழாக்கள் பலவற்றில் நாட்டுப்புறப் பாடல், ஆடல், கிராமியக் கலை நிகழ்ச்சிகளை நடத்தினார். தமிழ் நாட்டில் மட்டுமின்றி, அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகளிலும் இவர் நிகழ்ச்சிகளை வழங்கி மகிழ்வித்திருக்கிறார்.



ராமாயணத்தின் கிராமியக் கலை சார்ந்த பல்வேறு வடிவங்களைத் தொகுத்து ஒரே வடிவில், 'கிராமிய ராமாயணம்' என்ற தலைப்பில் மேடையேற்றினார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'சூழ்நிலை பாரதம்' என்ற தெருக்கூத்தை நடத்தினார். நீர்ச் சிக்கனத்தை வலியுறுத்தி 'பச்சைக்கோயில்' என்ற தலைப்பில் ஒலிநாடா ஒன்றை வெளியிட்டார்.

பணிஓய்வு பெற்ற பின்னரும், தமிழ் நாட்டுப்புறக் கலையைப் புத்துயிர் பெறச் செய்யும் தனது முயற்சிகளைக் கணவருடன் இணைந்து தொடர்ந்தார், விஜயலக்ஷ்மி. நாட்டுப்புறக் கலை பற்றிய கலைக்களஞ்சியத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். சென்னைத் தொலைக்காட்சியிலும் அகில இந்திய வானொலியிலும் நாட்டுப்புறக் கலை தொடர்பான பல நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ்பெற்றார். இவர் சேகரித்த நாட்டுப்புறப் பாடல்கள் பல திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்டன. 'புதுப்புது ராகங்கள்' என்ற திரைப்படத்தில் முக்கிய வேடத்தில் நடித்தார். அப்படத்தில் இவர் பாடிய நாட்டுப்புறப் பாடல்கள் மிகவும் பிரபலமாகின.

விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் இலக்கியத்திலும் ஆர்வமுடையவர். நா. பார்த்தசாரதி, இவருக்குப் பிடித்த எழுத்தாளர்களுள் ஒருவர். தொடக்க காலத்தில் இதழ்களில் சிறுகதைகள் சிலவற்றை எழுதினார். நாட்டுப்புறம் சார்ந்த பாடல்களை எழுதினார். கவிதை, நாடகம், சிறுகதைத் தொகுப்பு என 15-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். நாட்டுப்புறக் கலை குறித்து இருபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். நாட்டுப்புறப் பாடல்கள், கிராமியக் கலைகள் சார்ந்து கணவர் எம். நவநீதகிருஷ்ணனுடன் இணைந்து நூற்றுக்கணக்கான ஒலிநாடாக்களை வெளியிட்டுள்ளார்.

விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணனின் புகழ்பெற்ற நாட்டுப்புறப் பாடல்களில் சில:

ஒண்ணாம் படி எடுத்து....
https://www.youtube.com/watch?v=ofHFpPnwSUs&list=RDEMZxZ8_bGITox-AhdnXdxmrg&index=2

தோட்டுக்கடை ஓரத்திலே...
https://www.youtube.com/watch?v=i0KIEVpkPnM&list=RDi0KIEVpkPnM&start_radio=1

எங்க கருப்பசாமி...
https://www.youtube.com/watch?v=3s40Qrg2XNw&list=RDEMZxZ8_bGITox-AhdnXdxmrg&start_radio=1

எத்தனை இருக்கு சாமி...
https://www.youtube.com/watch?v=kICy7V0gsDg&list=RDi0KIEVpkPnM&index=2

ஓராங் கரகம்
https://www.youtube.com/watch?v=hqWQIkXOIrM&list=PLeW040AAme6iHMQavQV88AgDBzFegUL64&index=2

ஆசக்கொல்லை
https://www.youtube.com/watch?v=-G92lTaNi3I&list=PLeW040AAme6iHMQavQV88AgDBzFegUL64&index=5

அன்னீனி தன்னானே...
https://www.youtube.com/watch?v=w0L4FMlNPbM&list=PLeW040AAme6iHMQavQV88AgDBzFegUL64&index=7

கத்திரிக்காய் கூடைக்காரி...
https://www.youtube.com/watch?v=84-DbrwvvnA&list=PLeW040AAme6iHMQavQV88AgDBzFegUL64&index=4

அந்தப்பட்டீ இந்தப்பட்டீ
https://www.youtube.com/watch?v=UE64n2B6f74&list=PLeW040AAme6iHMQavQV88AgDBzFegUL64&index=8

ஒரு மஞ்சள்....
https://www.youtube.com/watch?v=PFTq8jyKNwM&list=PLeW040AAme6iHMQavQV88AgDBzFegUL64&index=11

விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் பாடல்கள் தொகுப்பு - 1
https://www.youtube.com/channel/UCaZ6ZY0jZT5KP3qlraYfgOQ

விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் பாடல்கள் தொகுப்பு - 2
https://www.youtube.com/watch?v=tXXWdgXj5c4&list=PLeW040AAme6iHMQavQV88AgDBzFegUL64



ஆண்டாள் குறித்து கவிஞர் வைரமுத்து பேசிய கருத்துள் சர்ச்சைக்கு உள்ளானபோது, அவரது கருத்துகளை எதிர்த்து விஜயலக்ஷ்மியும், நவநீதகிருஷ்ணனும் எதிர்க்கருத்து தெரிவித்ததுடன், ஒருநாள் உண்ணாவிரதமும் இருந்தனர். 'ஆண்டாளைப் பழித்த நாவுக்குப் பேசமுடியாமல் போகும்' என்று விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன், வைரமுத்துவுக்குக் கடும் சாபமிட்டு கண்ணீருடன் தன் கண்டனங்களைத் தெரிவித்தார்.



நாட்டுப்புறப் பாடல்கள் மீது பலரது கவனம் குவியக் காரணமாக இருந்தவர் விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன். அவற்றை ஒலிநாடாவில் பதிவு செய்து அவற்றுக்கு மிகப்பெரிய வணிகச் சந்தையை உருவாக்கினார்.

தமிழ் நாட்டுப்புறப் பாடல்களின் களத்தை மாற்றியமைத்த முன்னோடிகளுள் ஒருவர். நாட்டுப்புறவியல் சார்ந்து பல முக்கியமான பங்களிப்புகளைத் தந்த ஆளுமைகளில் ஒருவராக விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் மதிப்பிடத்தக்கவர்.

கதிரவனைக் கேளுங்கள்!

ஆரம்பநிலை நிறுவன யுக்திகள்

பாகம்-21-d

முன்னுரை:

ஆரம்பநிலை நிறுவனங்கள் தழைத்து வளர வேண்டுமானால், அவை கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை, தந்திரங்கள், யுக்திகள் யாவை எனப் பலர் பற்பல தருணங்களில் என்னைக் கேட்டதுண்டு. அவர்களுடன் நான் பகிர்ந்து கொண்ட சில குறிப்புக்களே இக்கட்டுரைத் தொடரின் அடிப்படை.

வடிவமைப்புக் கோவைக்காக இக்கட்டுரை வரிசை CNET தளத்தில் வந்த Startup Secrets என்னும் கட்டுரைத் தொடரின் வரிசையைச் சார்ந்து அமைத்துள்ளேன். ஆனால் இது வெறும் தமிழாக்கமல்ல. இந்தக் கட்டுரை வரிசையில் என் அனுபவ பூர்வமான கருத்துக்களோடு, CNET கட்டுரையில் உள்ள கருத்துக்களையும், ஒன்று சேர்த்து அளித்துள்ளேன். அவ்வப்போது வேறு கருத்து மூலங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதாக உத்தேசம்.

இப்போது ஆரம்பநிலை யுக்திகளை மேற்கொண்டு கற்கலாம் வாருங்கள்!

- ***கேள்வி: நான் ஒரு பெரிய நிறுவனத்தில் விற்பொருள் மேலாண்மை அதிகாரியாக உள்ளேன். என் சொந்த நிறுவனத்தை ஆரம்பிக்க யோசனை உள்ளது. அதற்காகப் பெரிய ஆராய்ச்சிகள் செய்து, நீங்களும் பரிந்துரைத்ததைப் போலவே பலரையும் கலந்து ஆலோசித்தாயிற்று. என் யோசனைக்குச் சாதகமாகக் கருத்துக்கள் கிடைத்துள்ளன. ஆனால் ஓரளவு சந்தேகமும் உள்ளது! வேலையை விடுத்து நிறுவனத்தை ஆரம்பிக்கத் தயக்கமாக உள்ளது. உங்கள் பரிந்துரை என்ன?***



கதிரவன் எழில்மன்னன்

கதிரவனின் பதில்:

இந்த யுக்திக் கட்டுரையின் முன்னொரு பகுதியில் தயங்காதீர்கள், தாவி விடுங்கள் என்று பதில் அளித்திருந்தேன்! ஆனால் அப்படித் தாவுவதற்கும் கண்மூடித்தனமாக அல்ல, புத்திசாலித்தனமாக சில முன் நிபந்தனைகளை அனுசரித்து, பின்பே தாவ வேண்டும் என்றும் சுருக்கமாகக் கூறியிருந்தேன். இப்போது அந்த முன் நிபந்தனைகள் என்ன, ஆரம்பநிலை நிறுவனத்துக்குத் தாவ எம்மாதிரியான



BALU SHASTRI

is now available in the Bay Area to conduct all Hindu religious rituals both in North and South Indian manner.

- Pooja of all Kinds
- Ceremonies
- Homams, etc.

Please contact:

Balu Shastri
6211 Prospect Road
San Jose, CA 95129



Tel: 408.738.0571
Cell: 408.393.7722
balushastri87@gmail.com

Vedic Sampradaya Rituals

All Traditional Hindu Pujas & Homas like -

- Ganapati, Navagraha Homas
- Upanayana, Seemantham, Marriages
- Sradha, Funeral Services

Classes in Puja Vidhi & Veda Chanting

Please Call

Pandit Ravichandran
Veda Pandit l Sahitya Siromani



1193 Bluebell Drive
Livermore, CA 94551
925.321.0285
panditravi@comcast.net

Om Sri Mathre Namaha



All kinds of Hindu traditional pujas and homas.

Ganapathi, Navagraha, Vasthu, Ayushya Homas.
Marriages, Seemantham, Namakarnam, Upanayanam, Sathyanarayana puja, Lakshmi Puja, Durga Sapthasathi Yanthra Puja.

Hiranya Sradha and last rites.
American Born Children's Horoscope.

Pandit Ganesh Shasthry
880 E Fremont Ave, Apt. 302
Sunnyvale, CA 94087
Home: **408.245.5443**
Cell: **925.209.7637**
Kabalikarpaga@hotmail.com
Lokasamastha sukino bhavanthu



!!! Aum Vasu Rudra Aadhithyaya Namaha !!!

All Poojas including:
Ganapathy-Homa, Lakshmi-Kubera, Rudra Abishek, Durga, Amba, Navagraha, Sathyanarayana Vratha, Ayyappa-Mandala, Car Pooja at dealer & home, Vidhyarambam, Santhi-Homa, Punyahavachana, Namakarana, Jathakarana, Thread, Marriage, Shashtibdha, Bhimarathasanthi, Sadhaabhishekam, Funeral-Rights, Sraadha ...

Pleasant & Excellent in English, Hindi, Telugu, Tamil, Malayalam ...

Serving Silicon Valley Bay Area & Nationwide



Bala Krishna Sharma



Cell: 510.417.7358
balakrishna1359@gmail.com

Sri. M. Vaithianathan Sastriji
Hindu Vedic Priest



All Hindu Religious Services
Pooja / Hawan and Samskarams



Ganapathy, Navagraha, Durga, Lakshmi, Saraswathi, Sudarsana, Narasimha, Vasthu, Ayushya, Mruthunjaya, Rudra and other Homas - Sathyanarayana, Sai Sathya Vrathams, Bhagawati Seva, Chandi Pat, All Shanthi Poojas, Naming Ceremony, Punyahavacham, Hair Offering, Upanayanam, Seemantham, Wedding, Gruha pravesam, 25th & 50th Wedding Anniversary, 60, 70, 80 - Birthday Shanthi, Last Rites, 12th day & 31st day Annual Sradh and all Hindu Religious, etc - Teaching Vedas and Slokas. Languages - English, Tamil, Telugu, Malayalam, Kannada & Hindi. Catering (Upon Request)

God Bless You

215.501.7175 | 267.884.6664
mvsastrigal@yahoo.com
mvsastrigal@gmail.com

Self transportation to Pooja site within 4 States - NY, NJ, & PA, DE

www.sastriji.com

Priest
V.Bhairava Moorthy



For All Kinds of Hindu Ceremonys
Rudrabhishekam, Grahasanti, Grihapravesam, Satyanarayana Pooja, Wedding (Officiant), Navachandi, Sraddhas
Veda / Sloka Classes & All Other Services

Email: vediccenter05@yahoo.com
Self Transport to Pooja Site. Any where in USA

V Bhairava Moorthy
732.438.1679 (Res)
718.730.3568 (Cell)
www.vediccenter05.com



செயல்முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பவற்றை விவரித்து வருகிறோம்.

முன்னர், முதல் நிபந்தனையாக, நீங்கள் பெரும் நிறுவன வேலையிலிருந்து விலகி ஆரம்பநிலை நிறுவனத்திலுள்ள சிக்கல்களைச் சந்தித்து, பல வருடங்கள் பாடுபடத் தயாரா என்பதைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தோம். இந்த முதல் நிபந்தனையில் பல துணை அம்சங்கள் உள்ளன என்றும் முதலிரண்டு துணை அம்சங்களாக, குடும்ப நிதிநிலைமை பற்றியும், எந்தப் பிரச்சனை, பணியானாலும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும் விளக்கினோம். இப்போது அடுத்த துணை அம்சத்தைப் பார்ப்போம்:

எதற்காக ஆரம்பநிலை நிறுவன முயற்சியில் இறங்குகிறீர்கள் என்பதை நீங்கள் நன்கு உணர்ந்த பின்பே களத்தில் இறங்க வேண்டும்.

நீங்கள் அவ்வாறு களத்தில் இறங்க காரணங்கள் இருக்கக் கூடும். தங்கள் யோசனையைச் சாதித்தே தீர வேண்டும் என்னும் தீவிர அவா சிலரை உந்தக் கூடும். ஆனால் எல்லாருக்கும் அப்படித்தான் என்றில்லை. சிலரை, மாதச் சம்பளத்துக்கு வேறு யாருக்கோ பதிலளித்துக் கொண்டு

காலம் தள்ளாமல், தனக்காகத் தானே முயன்று வெற்றி காண வேண்டும் என்ற உணர்வு உந்தக் கூடும். சிலருக்கு நிறுவனத்தை வளர்த்து விற்றோ, பங்குச் சந்தைக்குக் கொண்டு சென்றோ, வெற்றி கண்டு நிதிப்பலன் பெறவேண்டும் என்ற ஆசை இருக்கக் கூடும். இத்தகைய சில காரணங்களின் கலவையாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும், உந்துகின்ற காரணம் எது என்ற தெளிவும், அதில் அசையாத உறுதியும் இருக்க வேண்டும்.

இதில் என்ன பெரிய கேள்வி இருக்கிறது என்று நீங்கள் அலட்சியப் படுத்தக் கூடும். ஆனால், இது ஒரு முக்கியமான விஷயம். ஏனெனில், பெரும் நிறுவனத்தில் நல்ல நிலையில் இருக்கும்போது அதை விட்டுவிட்டு, ஆபத்தான ஆரம்பநிலை நிறுவனத்தில் தத்தளிக்கும் போது, ஏன் இதைச் செய்கிறோம் என்ற தெளிவு இல்லாவிட்டால் பெருத்த சிக்கலாகிவிடும்!

ஏனெனில், ஆரம்பநிலை நிறுவனங்களில் நெருக்கடிகள் நேர்வது சர்வ சாதாரணம்! பெரும் நிறுவனங்களில் எடுத்துக்கொண்ட வேலைகளில், நிதானமாக, பொதுவாக நேர்கோடாகச் சென்று ஓரளவாவது சாதிக்க முடியும். பெரும் நிறுவன அரசியல் நெருக்கடிகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் மேலதிகாரிகளின் உதவியோடு அவற்றை நிவர்த்திக்க முடியும்.

ஆனால் ஆரம்பநிலை நிறுவனத்தில் அப்படியல்ல. பல விதமான நெருக்கடிகள் தினசரி எழக்கூடும். பொறியியல் நுட்பம், வணிகச் சந்தை அல்லது வாடிக்கையாளர் என்று பற்பல திசைகளில் ஒரே நேரத்தில் பல நெருக்கடிகள் தலைதூக்கக் கூடும்!

ஆரம்பநிலை நிறுவனத்தில் அப்படியல்ல. பல விதமான நெருக்கடிகள் தினசரி எழக்கூடும். பொறியியல் நுட்பம், வணிகச் சந்தை அல்லது வாடிக்கையாளர் என்று பற்பல திசைகளில் ஒரே நேரத்தில் பல நெருக்கடிகள் தலைதூக்கக் கூடும்!

அத்தகைய தருணத்தில், துருவ நட்சத்திரமாக இருந்து, திடமாக நெருக்கடிகளைச் சந்தித்து, நிவர்த்தித்து, மேற்கொண்டு பயணிக்க வழிகாட்டக் கூடியது, ஏன் இந்த முயற்சியில் இறங்கியுள்ளேன் என்ற உங்கள் தெள்ளத் தெளிவான உள்ளுணர்வுதான்!

அத்தகைய தெளிவு இல்லாவிட்டால் "சே! எதற்கு இப்படி ஒரு இக்கட்டான முயற்சி? விட்டுத் தள்ளிவிட்டு அக்கடான்னு முன்மாதிரி பெரும் நிறுவன வேலைக்கே திரும்பப் போய்விடலாம்" என்று விரக்தி அடையக்கூடும்.

ஆனால் ஏன் நிறுவனத்தை ஆரம்பித்தேன் என்பதில் தெளிவும் உறுதியும் இருப்பின், எத்தகைய கடினமான நெருக்கடி முளைத்தாலும் விரக்தியில் விழமாட்டீர்கள். சளைக்காமல் சந்தித்து, சாதிக்க முடியும்!

முதல் நிபந்தனையின் இறுதித் துணை அம்சத்தை அடுத்த பகுதியில் விவரிப்போம்.

(தொடரும்)

முன்னோடி

முனைவர் இ. சுந்தரமூர்த்தி





பா.சு. ரமணன்

இ. சுந்தரமூர்த்தி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றிய தமிழறிஞர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத்தலைவராகப் பொறுப்பு வகித்தவர். பிப்ரவரி 05, 1942ல், கோயம்புத்தூரிலுள்ள வெள்ளலூரில் த. இளையபெருமாள் - பழனியம்மாள் தம்பதியருக்கு இளைய மகனாகப் பிறந்தார். வெள்ளலூரில் உள்ள பள்ளியில் தொடக்கக் கல்வி கற்றார். கோவை ராமநாதபுரம் பள்ளியில் உயர்நிலைக் கல்வி கற்றார். 1957ல் தாராபுரம் நஞ்சியம்பாளையம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றார். ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டே சென்னை பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றார். தமிழ் இலக்கியத்தில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களைப் பெற்றார்.

1959ல் சிங்காநல்லூரில் உள்ள பள்ளியில் ஆசிரியராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். பணியாற்றிக் கொண்டே மானிடவியல், கல்வெட்டுத் துறை ஆகியவற்றில் பட்டம் மற்றும் பட்டயம் பெற்றார். திருக்குறள் பரிமேலழகர் உரை குறித்து ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றார். வசந்தா

அம்மையாருடன் திருமணம் நிகழ்ந்தது. இவர்களுக்கு எழில் நம்பி, இளைய நம்பி என இரு மகன்கள். மகள், மலர்மகள்.

சுந்தரமூர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்துறையில் தலைவர், பதிப்புத்துறைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று 32 ஆண்டுகள் திறம்படப் பணியாற்றினார். 2001ல் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அந்தக் காலகட்டத்தில் புதிய பல பாடத்திட்டங்களையும், முதுகலைப் படிப்புகளையும் கொண்டு வந்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் முதுநிலை ஆராய்ச்சியாளராக 2008 முதல் 2014 வரை பணியாற்றினார். செப்டம்பர் 2021ல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றார். இவரது வழிகாட்டுதலில் 50க்கும் மேற்பட்டோர் முனைவர் பட்டமும், 50க்கும் மேற்பட்டோர் எம்.ஃபில் பட்டமும் பெற்றனர்.

சுந்தரமூர்த்தி, தமிழாய்வுப் பணிகளுக்காக ஜெர்மனி, சிங்கப்பூர், இலங்கை, மலேசியா உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்று தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்று உரையாற்றினார். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, செம்மொழி தமிழ் மாநாடு, சிகாகோவில் நடைபெற்ற பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு உள்ளிட்ட மாநாடுகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தார். ரஷ்யா, அமெரிக்கா, போலந்து, பின்லாந்து மாணவர்களுக்கு தமிழ் கற்பித்த சிறப்புக்குரியவர்.

பல்கலைக் கழகக் கல்விசார் குழு, கல்கத்தா தேசிய நூலகம், பிர்லா அறக்கட்டளையின் பாஷா சமிதி, சாகித்ய அகாதமி, தமிழ் இணையப் பல்கலைக் கழகம் போன்றவற்றில் உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழ்நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும்


இ. சுந்தரமூர்த்தி எழுதிய நூல்கள்: திருக்குறள் அணிநலம், பதிப்பியல் சிந்தனைகள், வாருங்கள் வாழ்வோம், இலக்கியச் சுடர், நடையியல் அறிமுகம், இலக்கியமும் பண்பாடும், வான்மறை வள்ளுவம், திருக்குறள் நடையியல், பாரதி நடையியல், உவமான சங்கிரகம், அணியிலக்கண ஆராய்ச்சி மற்றும் பல.

பதிப்பித்த நூல்கள்: திருமேனி காரி இரத்தின கவிராயர் இயற்றிய திருக்குறள் பரிமேலழகர் உரை நுண்பொருள் மாலை, ஐந்திலக்கணம், அறிவானந்த அடிகள் இயற்றிய சிறுத்தொண்டர் நாடகம், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த சிற்றிலக்கியத் திரட்டு, உடுமலைப்பேட்டை அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர், தமிழியல் ஆய்வு மேம்பாடு, உயராய்வு:15, இருபுராண விருத்தம், தவத்திரு தண்டபாணி சுவாமிகள் இயற்றிய வண்ணத்தியல்பு, திராவிட இயக்க இதழ்கள், தமிழ் ஆய்வு இதழ்கள், மகளிர் இதழ்கள், இலக்கிய இதழ்கள், தீவாகரம், மண்டல புருடர் வழங்கிய சூடாமணி நிகண்டு, பண்ணிசை மன்னர் தி.சா. சுந்தர ஓதுவா மூர்த்திகள் நினைவு மலர், கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள், முன்னோடிகள் மூவர், கார்மேகக் கவிஞர் வாலசுந்தரக் கவிராயர் கம்பநாத சாமி இயற்றிய கொங்கு மண்டல சதகங்கள், குறளமுதம் (தொகுப்பாசிரியர்) மற்றும் பல.



பாடநூல் குழு, கல்விக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகச் செயல்பட்டார்.

தமிழ் இலக்கியம் சார்ந்து 250க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியவர்.



தமிழ் இலக்கணம், இலக்கியம், ஆய்வு, சுவடியியல், பாரதியியல், பதிப்பியல், நடையியல் எனப் பல துறைகளில் 50க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும், பதிப்பித்தும் உள்ளார். 'வள்ளுவம்' என்ற இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தமிழக அரசின் திருக்குறள்நெறித் தோன்றல் விருது, திருவள்ளுவர் விருது, குன்றக்குடி ஆதினம் வழங்கிய புலவரேறு விருது, கம்பன் கழக விருது, சேக்கிழார் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவர். செந்தமிழ்ச் செல்வர், குறள் ஞாயிறு, தமிழ் மாமணி போன்ற பட்டங்களையும் பெற்றிருக்கிறார்.

பல மாணவர்களைப் பேராசிரியர்களாக உருவாக்கிய இ. சுந்தரமூர்த்தி, 84ம் வயதில் மே 13, 2026 அன்று சென்னையில் காலமானார்.

Sophisticated family Dentistry
DR.KALAI



- Single-visit root canals
- Cosmetic dentistry-bleaching, bonding, veneers
- Complicated extractions
- Crowns, bridges, partial dentures
- Most insurance plans accepted & payment plans offered
- Hindi, Tamil also spoken

Dr. Kalai DDS,
Univ. of Pacific, S.F.
10 Years Experience
Evening and Saturday appoinments

State-of the art Equipment
- Digital X-rays for Reduced Radiation
- Panoramic X-rays to View Jaw Joints
- Intra Oral Cameras
- Ultrasonic Scalers
- Weekly Monitoring of Sterilizers (to exceed regulatory standards)



408.735.7161
Fax: 408.735.7173
Wrightmont Professinal Center
990 W Fremont Ave, Ste Y, Sunnyvale, CA 94087

Reach communities
Local & Nationwide effectively

ADVERTISE IN THENDRAL

The Pride of
Asian Indian Publications
- in our 25th year

408.245.0193
thendral@tamilonline.com

Immigration Physicals



Manjari Aravamuthan, MD, PC
Board Certified
Internal Medicine & Primary Care

Tel: 408.929.6922
1569 Lexann Ave., #220
San Jose, CA 95121

We accept Medicare, PPO, HMO, Medicare Advantage

www.sanjoseInternist.com



SUJATHA SHANKAR MD
RASHIDA SAIF MD
ASSOCIATE
Board Certified Pediatricians

We care for Infants, Children, and Adolescents

***** Two Convenient Locations *****

77 Brunswick Woods Dr
East Brunswick, NJ 08816
732.238.6644

208 Bldg 'D', Bridge St
Metuchen, NJ 08840
732.548.8877

New Patients Welcome
Free Prenatal Consultation
Same Day Sick Appointments

We accept all insurances

We are very fluent in Tamil, Kannada, Telugu, Hindi and Gujarati

Admitting privileges in St Peter's, RWJ, and JFK Medical Centers

எங்கள் அக்கறை, உங்கள் குழந்தைகள் நலனில்

சிறுகதை

திருமணங்கள் விமானத்திலும் நிச்சயிக்கப்படலாம்!

தூங்கா நகரம் நியூயார்க். அறுபதுக்கும் மேற்பட்ட மேஜைகளுடன் விரிந்த பில்லியர்ட்ஸ் பகுதி, ஆர்கேட் விளையாட்டுகள், மேலும் அனைத்து வகையான உணவுகளையும் வழங்கும் பார் & கிரில் கொண்ட அந்தப் பெரிய உணவகத்தில், சினேகா காத்திருந்தாள். தனிமை அவளைச் சற்று வாட்டியது. அருகிலிருந்த காதல் ஜோடிகளின் சிரிப்பும், கும்மாளப் பேச்சும், அங்கு ஒலித்துக் கொண்டிருந்த பாடல்களையே மங்கச் செய்தது.

"ஹலோ சினேகா..." என்ற குரல் கேட்டது. அவள் பின்புறம் திரும்பிப் பார்த்தாள்.

போட்டோவில் மட்டுமே பார்த்திருந்த விவேக். கிட்டத்தட்ட ஐந்து அடி எட்டு அங்குல உயரம். தசைகளை வெளிப்படுத்தும் வகையில் இறுக்கமான சட்டை. மாநிறம், பார்க்க நன்றாக இருந்தான்.

"எப்படி இருக்கீங்க?" என்று கேட்டுக்கொண்டே, சினேகா அவனை லேசாக அணைத்து வரவேற்றாள்.

"சாரி! ரொம்ப நேரமா காத்திருக்க வேண்டியதாச்சு. கடுமையான போக்குவரத்து நெரிசல்" என்று விவேக் சற்றே சிரித்தபடி சமாளித்தான்.

இருவருக்கும் முப்பதுகளின் பிற்பகுதி வயது. வாழ்க்கைத் துணையைத் தேடி, சற்றுச் சலித்துவிட்ட கட்டம். அவர்களின் பொதுவான நண்பர் ஒருவர் இந்த அறிமுகச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார். சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது.

அந்த மௌனத்தை உடைக்க சினேகா, "நீங்க இந்தப் பாட்டு கேட்டிருக்கீங்களா? நியூ யார்க் நகரம் உறங்கும் நேரம், தனிமை அடர்ந்தது, பனியும் படர்ந்தது... ஆனா நியூ யார்க் நகரம் எப்பவும் தூங்குற மாதிரி தெரியல. எப்பவும் துடிப்பாகவே இருக்கும் ஒரு நகரம்."



மருங்கர்

விவேக் உடனே, "அந்தப் பாட்டு எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஏ.ஆர். ரகுமான் பாடியது," என்று உற்சாகமாகச் சொன்னான்.

மனத்திற்குள் ஏதோ ஒன்று பொதுவாக இருப்பதை உணர்ந்து சினேகா சற்று மகிழ்ந்தாள். இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, உணவு வந்தது. சாப்பிட்டதும், பானங்களை எடுத்துக் கொண்டு பில்லியர்ட்ஸ் மேஜையை நோக்கி நகர்ந்தனர்.

"நான் பில்லியர்ட்ஸ் இதுக்கு முன்னாடி ஆடினதே இல்லை," என்று சினேகா சிரித்தபடிச் சொன்னாள்.

"ஜஸ்ட் டைம் பாஸ்."

தொங்கும் விளக்குகளின் வெளிச்சத்தில் பில்லியர்ட்ஸ் பந்துகள் மின்னின. பச்சைத் துணி போர்த்தப்பட்ட மேஜையின் மீது குனிந்து, கோணங்களை கவனமாக உற்று நோக்கும் விவேக்கைப் பார்த்து சினேகா, "நீங்க ப்ரோ போல இருக்கு!" என்றாள்.

"நோ வே!" என்று சிரித்தபடி சொல்லிக் கொண்டே இலகுவாக இரண்டு பந்துகளைக் குழிக்குள் தள்ளினான்.

சற்றுப் பதற்றத்துடன் சினேகா "நீங்க பிசினஸ் பண்ணறீங்கன்னு கேள்விப்பட்டேன்..." என்றாள்.

"வாரத்தில் ஒரு நாள்தான் இங்கு இருப்பேன். மத்த நாளெல்லாம் வெளியூர்தான். நீங்க சிட்டில வேலை பாக்குறீங்கன்னு கேள்விப்பட்டேன். உங்க அலுவலகம் பிலடெல்பியாவிலும் இருக்கு இல்ல? இருப்பிடத்தை மாற்றிக்கொள்ள முடியுமா?" என்று விவேக் கேட்டவுடன், சினேகாவுக்குச் சற்று தூக்கிவாரிப் போட்டது.

விவேக் அவளைப் பார்த்து, "இது உங்கள் முறை," என்று சிரித்தபடி சொன்னான்.

அவள் மனநிலையைப் போலவே, அவள் அடித்த ஷாட்டும் குறிதவறிப் போனது. சினேகா ஒரு பெரிய சட்ட நிறுவனத்தில் பணியாற்றுகிறாள். பதவி உயர்வுக்காகக் கடுமையாக உழைத்து வரும் அவளுக்கு, நியூயார்க் நகரத்தை விட்டு வெளியே போவது சரியாக இருக்காது என்று தோன்றியது. பேச்சைத் திசை திருப்பினாள்.

பேசப்பேச அவர்களுக்குள் இருந்த வேற்றுமைகள் மெதுவாக வெளிப்பட்டன. அந்தக் கலக்கத்திலேயே, சினேகா அடித்த பந்து தவறான பந்தைக் குழியில் தள்ளியது.

ஆட்டம் முடிந்தது. சந்திப்பும் முடிந்தது.

❍ ❍ ❍

ஆஸ்டின் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியது. செழியனின் அலைபேசியில் நுழைவாயில் மூன்றிற்கு வருமாறு குறுஞ்செய்தி வந்தது. சிறிது நேரத்தில் வெளியே வந்த அவன், குறுஞ்செய்தியில் வந்த அடையாளங்களைப் பார்த்து, அங்கு நின்றிருந்த டெஸ்லாவில் ஏறினான்.

ஸ்டீயரிங்கைப் பிடித்தபடி ராகவி, "வெல்கம் டு ஆஸ்டின்!" என்று புன்னகையுடன் வரவேற்றாள். "நானே ஊபர் பிடிச்சு..." என்று செழியன் சொல்லத் தொடங்கியவுடன், "தட்ஸ் ஃபைன்..." என்று சொல்லிவிட்டு, பின்புறம் மடங்கியிருந்த ஃபால்கன்-விங் கதவுகளுடன், முன்னே விரிந்த சாலையை நோக்கித் தன்னம்பிக்கையுடன் வண்டியை ஓட்டத்

தொடங்கினாள். இருவரும் ஒரு டேட்டிங் இணையதளம் மூலம் அறிமுகமானவர்கள். இன்றுதான் நேரில் சந்திப்பு.

பயணத்தின்போது, குடும்ப வணிகம் பற்றிப் பேசினாள். வழியில் இருந்த ஒரு ஓட்டலைக் காட்டி, அதுவும் அவர்களது குழுமத்தில் வருவதாகச் சொன்னாள். அவள் மிகுந்த தன்னம்பிக்கை கொண்ட இளம்பெண் என்று செழியன் நினைத்தான். அதை அவன் ஏற்றுக் கொண்டாலும், அவளது மேலான செல்வநிலை சற்றே அவனை உறுத்தியது.

ஓர் ஓட்டலின் முன் வண்டியை நிறுத்தி, அன்று மாலை ஓர் உணவகத்தில் சந்திப்பதாகக் கூறி ராகவி விடைபெற்றாள்.

அன்று மாலை. அழகாக அலங்கரிக்கப்பட்ட ஆடம்பர உணவகத்தில் இருவரும் அமர்ந்திருந்தனர். மென்மையான பொன்னிற விளக்குகள் அவர்களைச் சுற்றி ஒரு இனிய சூழலை உருவாக்கின. பின்னால் நீரூற்று மெதுவாக உயர்ந்து விழும் ஒலி அந்த அமைதியை இன்னும் ரம்மியமாக மாற்றியது.

செழியன் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவன். இன்னும் வாடகை வீட்டில்தான் வசிக்கிறான். கல்விக் கடன் முழுவதுமாகத் தீரவில்லை. இணையவழி உரையாடல்களில் அவன் தனது பொருளாதார நிலை பற்றிப் பேசவேயில்லை. அதை ஒரு பெரிய தவறாக உணர்ந்தான், அவன் மனத்தில் ஒரு சிறிய வருத்தம் எழுந்தது.

அந்தக் கவலையில் மூழ்கியிருந்த அவனை, "என்ன செழியன், ரொம்ப அமைதியா இருக்கீங்க... எவ்ரிதிங் ஓகே?" என்று கேட்ட ராகவியின் சத்தமான குரல் தட்டி எழுப்பியது.

திடீரென்று தூக்கத்தில் இருந்து எழுந்தவன் போல, "ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை..." என்று சொல்லிச் சமாளித்தான்.

ஆர்டர் செய்த உணவு வந்தது. சாப்பிட்டபடியே பேசத் தொடங்கினர். இணையத்தில் குறைவாகவே பேசியதால், ஒருவருக்கொருவர் பிடித்த உணவு முதல் திரைப்படங்கள் வரை பல விஷயங்களைப் பகிர்ந்தனர்.

ஆனால் உரையாடலின் இறுதியில் ராகவி சொன்ன ஒரு விஷயம் செழியனின் மனதைச் சற்று சுருக்கியது. தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்று அவள் தெளிவாகச் சொன்னாள்.

செழியனுக்கும், அவனது பெற்றோருக்கும் இறைநம்பிக்கை மிகப்பெரிய விஷயம். வார இறுதிகளில் கோயிலுக்காகத் தன்னார்வப் பணிகளில் ஈடுபடும் குடும்பம் அது. சில ஒற்றுமைகள் இருந்தாலும், சில முக்கியமான விஷயங்களில் வேற்றுமை இருப்பதை இருவரும் உணர்ந்தனர்.

சிறிது நேரத்தில் அவர்கள் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினர். "ஊருக்குப் போனதும் குறுஞ்செய்தி அனுப்புறேன்..." என்று செழியன் சொன்னான்.

ஆனால் ஒன்றும் வரப் போவதில்லை என்று இருவருக்கும் தெரியும்!

❍ ❍ ❍

சில மாதங்கள் ஓடின.

மினியாபோலிஸ் செயின்ட் பால் விமான நிலையம். ஓடுதளத்தில் இருந்து விமானம்



மெதுவாக வேகமெடுத்து, கலிஃபோர்னியா நோக்கி விண்ணில் பறந்தது. சிறிது நேரத்தில் விமானம் இயல்பு நிலையை அடைந்ததாகத் தலைமை விமானி ஒலிப்பெருக்கியில் அறிவித்தார்.

ஜன்னல் பக்க இருக்கையில் அமர்ந்திருந்த சினேகா, வெளியில் தெரிந்த அடர்ந்த மேகங்களைப் போலவே குழப்பமான மனநிலையில் இருந்தாள். அம்மாவிடமிருந்து வந்த குறுஞ்செய்தியை மீண்டும் திறந்து வாசித்தாள்.

"திருமணத்திற்கான வரன் என்பது இருவழிச் சாலை. கொஞ்சம் விட்டுக் கொடுத்தால்தான் பயணம் நன்றாகச் செல்லும். சமரசம் செய்யத் தயாராக இருந்தால், அதைவிட மதிப்புள்ளதை வாழ்க்கை திருப்பித் தரும்."

எவ்வளவு நிதர்சனமான உண்மை! அந்த வார்த்தைகள் அவளது மனதில் ஆழமாக ஒலித்தன. அந்த எண்ணங்களில் மூழ்கியிருந்தபோது, யாரோ ஒரு குரல் அவளை அழைத்தது.

அது வேறு யாருமல்ல, செழியன்தான்!

"தொந்தரவுக்கு மன்னிக்கவும்... அங்க ஒரு சின்னக் குழந்தையைக் கையில வச்சுக்கிட்டு ஒரு குடும்பம் கஷ்டப்படுது. அவர்களுக்குக் கூடுதல் இடம் தேவைப்படுது. இந்த இருக்கை காலியா இருக்கறதைப் பார்த்தேன்... இங்க வரலாமுன்னு நினைத்தேன், உங்களுக்கு ஓகேவா?" என்று கனிவாகக் கேட்டான்.

சினேகா விமானத்தில் ஏறியதும், தன் பக்கத்து இருக்கையில் யாரும்

இல்லாததைப் பார்த்து மகிழ்ந்திருந்தாள். ஆனால் அவன் கேட்ட விதத்தில், அவள் இருந்த மனநிலையில் சரி என்று சொல்லி விட்டாள்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. செழியன் ஏதோ புதிய ஆல்பத்தின் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தான். சினேகா கணினியில் ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் விமானம் சற்றுக் குலுங்கியது. தலைமை விமானி அனைவரையும் சீட் பெல்ட் அணியுமாறு அறிவித்தார். இருவரின் கவனமும் கலைந்தது.

செழியன் சினேகாவைப் பார்த்து, "ஐ டோன்ட் லைக் டர்புலென்ஸ்..." என்று சற்றே பதட்டமாகச் சொன்னான்.

சினேகா சிரித்தபடி, "விமானம் குலுங்குவதைப் பற்றி நான் கவலைப் படுவதில்லை. நம்மைவிட அதிகச் சிரமப்பட்டு உழைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நினைவூட்டத்தான் அது குலுங்குகிறது... சமீபத்துல ஒரு மீம்ஸ்ல இதைப் படிச்சேன்," என்று சொன்னாள்.

"குட் ஜோக்," என்று செழியன் வழிந்தான். அதற்குப் பிறகு இருவரும் பரஸ்பரம் அறிமுகம் செய்து கொண்டனர்.

"நீங்க மின்னசோட்டாவா?" செழியன் கேட்டான்.

"இல்லை, நியூ ஜெர்சியில வேலை செய்கிறேன். அலுவலகப் பணிக்காக மின்னசோட்டா வந்தேன். அடுத்ததாக கலிபோர்னியா செல்கிறேன். நீங்க?" என்றாள்.

"நானும் நியூ ஜெர்சிதான்! என்ன ஆச்சரியம். நாம இருவரும் ஒரே ஊரு. என் நண்பரின் திருமணத்திற்காக கலிபோர்னியா செல்கிறேன். விமானத்தின் வழித்தடம் மாறியதால் மின்னசோட்டா வந்தேன்," என்ற அவன் குரலில் ஓர் உற்சாகம் தெரிந்தது.

அதற்குப் பிறகு இருவரும் இன்னும் அன்யோன்யமாகப் பேசத் தொடங்கினர். பள்ளிக்கூடம் முதல் கல்லூரி வரை நினைவுகளைப் பகிர்ந்தனர். இருவரும் பரஸ்பரப் போட்டியுள்ள கல்லூரிகளில் படித்ததாகச் சொன்னார்கள்.

செழியன் சினேகாவைப் பார்த்து, "இன்னைக்குகூட உங்க காலேஜ் பத்தி ஒரு ஜோக் வந்தது... சொல்லலாமா?" என்று கேட்டான்.

அவள் லேசாகத் தலை அசைத்தாள்.

"உங்க கல்லூரி மாணவன், எங்க கல்லூரி மாணவனைப் பார்த்து: 'செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம், ஸ்டார்ட்அப்கள்... எதிர்காலம் எல்லாம் இங்கதான்." என்றாராம்.

"அதுக்கு எங்க கல்லூரி மாணவன்: 'சரி, ஆனா உங்க எதிர்காலத்திற்கும், கல்விக் கடனுக்கும், வை-ஃபைக்கும் ஒரே பாஸ்வர்ட்தான்: ஓட்டாண்டி123' என்று சொன்னாராம்."

இதைச் சொல்லிவிட்டு, செழியன் சற்று கலக்கமாக அவளைப் பார்த்தான். சினேகா சிரித்தபடி, "நான் படிக்கிறப்ப இந்த ஜோக் சொல்லி இருந்திங்கன்னா, உங்களைக் காலி பண்ணியிருப்பேன். ஆனா இப்ப எல்லாம் தமாஷாதான் இருக்கு," என்று சொன்னாள்.

SANKARA NETHRALAYA OM TRUST

SANKARA NETHRALAYA & SANKARA NETHRALAYA OM TRUST, INC, USA

SANKARA NETHRALAYA



Smiling ambassadors of Sankara Nethralaya's community eye care

It is boundless joy for Mallika the doting grandma to behold the twinkling smile on her little darling's face again!

Your donations to the SN OM Trust help bring the joy of vision back into the face of millions of poor visually impaired in India

Contributions made by Indians living in the USA helped in performing a very large number of cost free surgeries in year 2018

All contributions to the SN OM Trust are 100% tax exempt in the USA under 501 (C)(3) of IRS

Contact:

Mr. S.V. Acharya, President Emeritus, (855) 4NETHRA - Toll Free, snomtrustusa@yahoo.com

Mr. Bala Reddy Indurti, President, (770) 851-4765, brindurti@gmail.com

Checks may be drawn on Sankara Nethralaya OM Trust Inc. and mailed to Mr. Acharya, 9710 Traville Gateway Drive No.392, Rockville, MD 20850. Donate online : www.sankaranethralayausa.org

அவள் தன் வேலை பற்றிச் சொன்னாள். செழியன் தான் ஒரு விலங்குக் காட்சி சாலையில் பராமரிப்பு மருத்துவராக வேலை செய்வதாகச் சொன்னான். அதைக் கேட்டவுடன், சினேகாவின் முகத்தில் ஆயிரம் வாட் பல்பு போட்டது போல ஒரு மகிழ்ச்சி ஒளிர்ந்தது.

"ஓ! அந்த விலங்குக் காட்சி சாலையிலா வேலை பார்க்கிறீங்க? அதுக்குப் பக்கத்தில தான் எங்க வீடு!"

என்று உற்சாகமாகச் சொன்னாள். அவள் வசிக்கும் இடம் பற்றி மேலும் விளக்கினாள்.

அதைக் கேட்ட செழியன், "நான் உங்க வீட்டைத் தாண்டிதான் தினமும் வேலைக்குப் போவேன்," என்று சிரித்தான். இருவரும் மிகவும் நெருங்கி விட்டதாக உணர்ந்தார்கள்.

அதற்குப் பிறகு அவர்கள் தங்களது வாழ்க்கை, பயணங்கள் பற்றி பேசத் தொடங்கினர். சில விஷயங்கள் ஒத்துப் போகவில்லை; சில விஷயங்களில் ஆழமாக ஒத்துப் போனார்கள். வாழ்க்கை என்றால் கொடுத்தும் பெற்றும் செல்லும் ஒரு சமநிலை. அந்தச் சமநிலையில்தான் உறவுகளின் உண்மையான அழகு இருக்கும் என்பதைச் சமீபத்தில் இருவரும் உணர்ந்திருந்தனர். டேட்டிங் காலத்தில் பலமுறை முறிந்த அனுபவங்களே இதை அவர்கள் மனத்தில் பதியச் செய்தது.

ஒலிபெருக்கியில் விமானம் இறங்கப் போவதாக அறிவித்தனர். சினேகா தான் ரெஸ்ட்ரூம் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டு எழுந்தாள். செழியன் தனது இருக்கைக்கு திரும்பினான்.

அதற்குப் பிறகு அவர்கள் பேசுவதற்கான சந்தர்ப்பம் அமையவில்லை. செல்பேசி எண்களைப் பரிமாறிக் கொள்ளாதது குறித்து இருவருக்கும் மனதில் ஒரு நெருடல்.

விமான நிலையத்தின் வெளியே ஊபர் பகுதி. செழியன் சினேகா நிற்பதைப் பார்த்தான். அவளை நோக்கி விரைவாக நடக்கத் தொடங்கியபோது, அவள் ஊபர் காரில் ஏறிக் கிளம்பி விட்டாள். அவன் மிகவும் ஏமாற்றமடைந்தான். தன்னைத்தானே சபித்துக் கொண்டான்.

சிறிது தூரம் சென்ற கார் திடீரென நின்றது. சினேகா வெளியே வந்தாள்.

அவளை நோக்கி ஓடிய செழியன் தைரியமாக, "ஒரிரு வாரங்களில் விலங்குக் காட்சி சாலையில் 'நண்பரை அழைத்து வருக' நிகழ்ச்சி இருக்கு. என்னுடன் அதில் கலந்துகொள்ள முடியுமா?" என்று கேட்டான்.

சினேகா புன்னகையுடன், "கட்டாயமாக," என்று சொல்லிவிட்டு, செல்பேசி எண்ணைப் பகிர்ந்தாள்.

அதே நகரத்தில் இருந்த இருவர், அங்கே சந்தித்துக் கொள்ளவே இல்லை. ஆனால் சம்பந்தமே இல்லாத ஓர் ஊரிலிருந்து கிளம்பிய விமானத்தில் சந்தித்து, இன்று ஒன்றாகப் போகும் பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

திருமணங்கள் விமானத்திலும் நிச்சயிக்கப்படலாம்!

தெரியுமா:

3rd i நடத்தும் 3வது சான் பிரான்சிஸ்கோ சர்வதேச தெற்காசியத் திரைப்பட விழா

அக்டோபர் 9-11 சான் பிரான்சிஸ்கோவின் தி ரோக்ஸி தியேட்டரில் (The Roxie Theater) 3வது சான் பிரான்சிஸ்கோ சர்வதேச தெற்காசியத் திரைப்பட விழாவை '3rd i' நடத்த உள்ளது.

கலைப் படங்கள், ஆவணப் படங்கள், புதுமையான படைப்புகள் வரை, தெற்காசியர்களின் மாறுபட்ட திரைப்படங்களை உலகிற்கு அறிமுகப்படுத்த '3rd i' உறுதிபூண்டுள்ளது.

பாலிவுட்டைத் தாண்டி, பங்களாதேஷ், பாகிஸ்தான், பிரான்ஸ், தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து, விருது பெற்ற கதை, ஆவணப்படம் மற்றும் குறும்படங்களை இந்த விழா வழங்குகிறது. இருண்ட நகைச்சுவை, வசீகரமான நாடகம் வரை, இதயத்தைத் தொடும் சமூக நையாண்டி முதல் மனிதநிலை குறித்த தனித்துவமான கண்ணோட்டங்கள் வரை, தெற்காசியா மற்றும் அதன் புலம்பெயர்ந்தோரின் அற்புதமான சினிமாக்களைக் கொண்டுவருகிறது.

தொடக்க நாளன்று இரவில், விருது பெற்ற பிரிட்டிஷ்-இந்திய இயக்குனரும் திரைக்கதை எழுத்தாளருமான ஏவி லுத்ராவின் படைப்பாற்றல் மேதைமையை அவரது நகைச்சுவை மிக்க, நுணுக்கமான, சிக்கலான, சமூக நுண்ணறிவு கொழிக்கும் குறும்படங்களைத் திரையிடுகிறது. குடியேற்றம், உறவுகள், அடையாளம், பாலினம், பாலியல், சமூக நீதி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் அற்புதமான கதைகளின் தொகுப்பான "A Celebration of the Extraordinary Work of Avie Luthra" என்ற நிகழ்ச்சிக்கு வாருங்கள். இயக்குனர் ஏவி லூத்ராவுடன் கேள்வி பதில் இடம்பெறும்.

பெண்களின் குரல்களுக்கு ஒரு தளத்தை வழங்கும் பணியில், 3rd i லென்ஸுக்குப் பின்னாலும் திரையிலும் பெண்கள் இடம்பெறும் படங்களைக் கொண்டு வருகிறது. புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் அனுஷா ரிஸ்வியின் சமீபத்திய 'The Great Shamsuddin Family' (இந்தியா, 2025) ஒரு நகைச்சுவையான, கூர்மையான, இதயத்தைத் தொடும் சமூக நையாண்டி ஆகும். அவரது முதல் படம் 'Peepli Live' அகாடமி விருதுகளுக்கு இந்தியாவின் தேர்வாகும். அது சன்டான்ஸில் திரையிடப்பட்ட முதல் இந்தியத் திரைப்படமும் ஆகும். டெல்லி அடுக்குமாடிக் குடியிருப்பு வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட, ஒரே நாளில் நடக்கும் இந்த நகைச்சுவைக் கதை, வீட்டுக் குழப்பத்தை நவீன இந்தியாவின் கதையாகச் சொல்கிறது.

மாயாஜாலம் போன்ற, இனிய, கண்ணுக்கு விருந்தான Ghost School (பாகிஸ்தான்/ஜெர்மனி/சவுதி அரேபியா, 2025) படம் பிரிட்டிஷ் - பாகிஸ்தான் சீமாப் குல்

இயக்கியது. பேய்களின் பயத்தால் நடுங்கும் ஒரு சமூகத்தில் ஒரு குழந்தை பதில்களைத் தேடுவதைப் படமாக்கி இருக்கிறார். ஒரு பரந்த, சூரிய ஒளிமிக்க நிலப்பரப்பில் பயணிக்கும் பத்து வயது ராபியா, பேய்க் கதைகளுக்கான காரணங்களையும், தனது கிராமத்தில் உள்ள ஒரே பள்ளி ஏன் மூடப்பட்டது என்பதையும் கண்டுபிடிக்கும் தேடலில், அனைத்து வகுப்புகள் மற்றும் பின்னணிகளைச் சேர்ந்த மக்களைச் சந்திக்கிறாள்.

இந்த ஆண்டின் திரைப்பட விழா, எளிய வகைப்படுத்தலை எதிர்க்கும், கதை சொல்லலின் எல்லைகளை விரிவுபடுத்தும் இந்தியக் கதைகளை வழங்குகிறது. இருண்ட நகைச்சுவை ததும்பும், வண்ணமயமான *Lali* (பாகிஸ்தான், 2026) என்ற த்ரில்லரை இயக்குனர் சர்மத் கூசாட் வழங்குகிறார், இதில் பேய்கள் உயிருள்ளோர் நடுவே நடமாடுகின்றன. ஓர் இளம் பஞ்சாபி தம்பதியினர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஜோசியம் முக்கியமாக இருக்கிறது. ஜீபாவுடன் திருமணத்துக்கு நிச்சயிக்கப்பட்ட மூவர் மர்மமான முறையில் இறந்து போகவே, அவர் சஜாவலைத் திருமணம் செய்து கொள்கிறார். ஒரு விறுவிறுப்பான சமூக நையாண்டியாகத் தொடங்கி, பொறாமை மற்றும் அமானுஷ்யத்துக்கு நகர்கிறது. இவர் கேன்ஸ் திரைப்பட விழா ஜூரி பரிசு வென்றவர். அகாடமி விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தானின் முதல் படமான *Joyland* படத்தையும் கூசாட் தயாரித்தார்.

சோதனை ரீதியான கலைப்படம் *Sand City* (பங்களாதேஷ், 2025). இயக்குனர் மஹ்தே ஹசன் பங்களாதேஷின் டாக்காவை ஆராய்கிறார், அங்கு குடியிருப்போரும் உள்ளதொரு ஆழமான தொடர்பு மணல். இதில் பிரெஞ்சு ஒளிப்பதிவாளர் மேத்யூ ஜியோம்பினி, ஒரு கடுமையான ஆனால் அழகான ஓவியத்தை வரைகிறார், அது ஓர் இடம் மட்டுமல்ல, உயிருள்ள, சுவாசிக்கும் ஜீவன். தனித்தனிக் கோடுகளான எம்மா மற்றும் ஹசன் சந்திக்கும் ஒரு புள்ளியில் மணல், தனிமை, நகர்ப்புற அந்நியமாதல், செயலிழப்பு, பெருநகர வனாந்தரத்தில் உயிர்வாழ வேண்டிய விசித்திரமான விஷயங்கள் ஆகியவை குறுக்கிடுகின்றன.

இயக்குனர் கௌதம் சோண்டியின் *Technocats* (இந்தியா, 2026) போன்ற கண்கவரும் ஆவணப்படங்களும் விழாவில் இடம்பெறுகின்றன. இந்தியாவின் உயரடுக்கு இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் (IIT), ஒரு "Cat" என்றால் எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்தவர். இந்தப் பொறியியல் பள்ளிகள் கூகிள், மைக்ரோசாப்ட், ஐபிஎம் மற்றும் பிற தொழில்நுட்ப ஜாம்பவான்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளை உருவாக்கியுள்ளன. ஐஐடி முன்னாள் மாணவரான சோண்டி, சீர்மை கோரும் செலவு, அதன் பொருள், தரவரிசைக்குப் பின்னால் உள்ள உண்மை மற்றும் இந்தியாவின் மிகவும் தீவிரமான நிறுவனங்களில் ஒன்றை வழிநடத்தும் இளம் மனங்களின் அமைதியான மீட்சித்தன்மை ஆகியவற்றை ஆராய்கிறார்.

பிரமிக்க வைக்கும் வனங்களில் படமாக்கப்பட்டுள்ளது *Eternal Trees, Eternal Mountains* (இந்தியா/அமெரிக்கா, 2026). சிக்கலான, நெகிழ்வான பழங்குடி சமூகத்தைச் சித்திரிக்கும் படம் இது. ஹர்ஷா ரெட்டி மற்றும் கிறிஸ் செகுரி இயக்கியுள்ளனர். 1998ஆம் ஆண்டில்,



அமெரிக்க மாணவர் ஹர்ஷா புலிகளை ஆய்வு செய்யத் தென்னிந்தியாவின் காடுகளுக்குச் சென்றார். அடுத்து

இருபதாண்டுகளுக்குப் பிறகு, தனது வரலாற்றாசிரியர் நண்பர் கிறிஸ் உடன் செஞ்சு மக்களின் கிராமங்களுக்குத் திரும்பினார், இந்த பழங்குடி சமூகத்தின் வேர்கள் அவர்கள் தமது வீடென்று அழைக்கும் பண்டைய காடுகளைப் போல ஆழமாக ஓடுகின்றன. ஹர்ஷா ரெட்டி மற்றும் கிறிஸ் செகுரியுடன் கேள்வி பதில் இடம்பெறும்.

பிரெஞ்சு-இலங்கை லாரன்ஸ் வாலின் இயக்கிய The Loyal Man (பிரான்ஸ், 2020) படத்துடன் விழா நிறைவடையும். கடந்த ஆண்டு பெருத்த வரவேற்பைப் பெற்றது அவரது Little Jaffna. இந்த ஆண்டில், பிரான்சின் புகழ்பெற்ற பாரிஸின் கடுமையான பாதாள உலகில் நம்மை மூழ்கடிக்க வருகிறது அவரது முதல் பிரெஞ்சு-இலங்கை தமிழ்ப் படம். கடத்தல் கும்பலின் கட்டுப்பாட்டில் உள்ள கடத்தப்பட்ட பெண்ணான மினாலேவை ஆதி காதலிக்கிறான். அவன் முதலாளிக்கும் தனது விசுவாசத்தைக் காட்ட வேண்டும்.

ஸ்ருதி பரேக் இயக்கிய Homebody என்ற குறும்படத்துடன் நிறைவு நாள் நிகழ்ச்சி தொடங்குகிறது. இயக்குனர் லாரன்ஸ் வாலினுடன் பிரத்யேகமாக கேள்வி பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.


நுழைவுச் சீட்டுகள்:

தனிப்பட்ட படங்கள் $13. காட்சி நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்புவரை ஆன்லைனில் டிக்கெட் வாங்கலாம். **Roxie Box Office** - ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் 30 நிமிடங்களுக்கு முன்பு டிக்கெட்டுகளை விற்கும்.

மேலும் தகவலுக்கு: **thirdi.org**.

மேலோர் வாழ்வில்

மஹாராஜ் நீம் கரோலி பாபா



டாக்டர் ரிச்சர்ட் ஆல்பர்ட், ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உளவியலாளர், பேராசிரியர். இவற்றோடு உளவியல் கற்பித்தல், சிகிச்சை, உளப்பகுப்பாய்வு ஆகியவற்றிலும் ஈடுபட்டிருந்தார். அத்தகைய சிகிச்சைகளின் போது ஒருமுறை, ஆய்வுக்காகத் தனது நண்பர்களுடன் இணைந்து சைலோசைபின் என்ற மனமயக்க மருந்துகளில் ஒன்றைப் பயன்படுத்தினார். அது அவருள் தாக்கத்தை ஏற்படுத்தியது. உளவியல் குறித்த சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது. மாயத் தோற்றங்கள் பற்றிய அனுபவங்களைப் பெற்றார். அடுத்து எல்.எஸ்.டி. எனப்படும் போதை மருந்தை உட்கொண்டார். அது அவரது வாழ்க்கையிலும், சிந்தனையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தின. அம்மருந்தை உட்கொண்டது முதல் புலன்களின் அறிதல் திறன் மேம்பட்டதாகக் கருதினார். சிந்தனை மற்றும் செயல்முறையையும் அது வேகப்படுத்தியது. கூடவே வேறு ஒரு உலகத்தில் இருப்பதைப் போன்ற தோற்றத்தை அது உருவாக்கியது. இவை அவரது சிகிச்சைகளுக்கும் ஆய்வுகளுக்கும் உதவின.



பா.சு. ரமணன்

ரிச்சர்ட் ஆல்பர்ட், இவ்வகை மருந்துகளைப் பயன்படுத்தியது பல்கலைக்கழகத்திற்குத் தெரிய வந்தது. அவர் ஹார்வர்ட்

பல்கலையிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டார். ஆனாலும் தனது சிகிச்சை முறைகளையும் ஆய்வுகளையும் தொடர்ந்தார். எல்.எஸ்.டி.யைப் பலருக்கு அளித்து அதன் விளைவுகளை, அதனால் ஏற்படும் தாக்கங்களை, பரிசோதித்தார். உளவியல் பேராசிரியர் மற்றும் ஆலோசகராக அது அவருக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது. அவரது நண்பர்கள் சிலர் இந்தியாவுக்குச் சென்று வந்தனர். ரிச்சர்டும் இந்தியா செல்ல விரும்பினார். ஆனால், அவரது மனதில் வேறு வகை எண்ணங்கள் இருந்தன. "இந்திய ஞானிகளையும், மகான்களையும் சந்திக்க வேண்டும். அவர்களுக்கு எல்.எஸ்.டி. கொடுக்க வேண்டும். அவர்கள் அடையும் மாற்றங்களை அவதானிக்க வேண்டும். அவர்களது அனுபவங்களைப் பதிவுசெய்ய வேண்டும். அதன்மூலம் கீழைத் தேசங்களில், புலன் கடந்தவர்களாக அறியப்படுபவர்களிடம் எல்.எஸ்.டி. என்ன வகை மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதை அறியலாம்" என்று எண்ணினார்.

அவர் இந்தியாவுக்குப் புறப்பட்டார். அமெரிக்காவிலிருந்து ஈரானுக்கு சென்றார். அங்கிருந்து நேபாளத்திற்குச் சென்றார். இறுதியாக ஒரு நண்பருடன் காரில் இந்தியா வந்தடைந்தார். அவரது முதல் மூன்று மாதங்கள் ஆப்கானிஸ்தானில் கழிந்தன. தலாய் லாமாவைச் சந்தித்தார். காஷ்மீரில் உள்ள அமர்நாத் குகைக்குச் சென்றார். காத்மாண்டு மற்றும் காசிக்குப் பயணப்பட்டார்.

வட இந்தியாவின் பல பகுதிகளில் பயணம் செய்தார். ஆய்வின் நிமித்தம் இந்தியாவில் பலருக்கு எல்.எஸ்.டி. கொடுத்தார். அவர்களிடம் பெற்ற பதில்கள் அமெரிக்காவில் அவருக்குக் கிடைத்த பதில்களைப் போலவே இருந்தன. பெரிதாக எந்த மாற்றமும் இல்லை.

இந்நிலையில் அவர் நேபாளத்தில் பகவான் தாஸ் என்பவரைச் சந்தித்தார். பகவான் தாஸ் ஓர் அமெரிக்கர். ஞானத் தேடலின் விளைவாக இந்தியாவில் பல இடங்களுக்குச் சென்று வந்தார். அவர்மூலம் இந்துத் தத்துவங்கள் மீது ரிச்சர்ட் ஆல்பர்ட்டுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அதே சமயம் பௌத்தமும் அவரை ஈர்த்தது.

இந்தியாவில் வசித்து வந்த காலத்தில் ரிச்சர்டுக்கு ஒருநாள் இரவு ஒரு விசித்திரமான அனுபவம் ஏற்பட்டது. அவர் தாயார் காலமாகி ஒன்பது மாதங்கள் ஆகி இருந்தன. மண்ணீரல் நோயால் பாதிக்கப்பட்டு அவர் அமெரிக்காவில் காலமாகியிருந்தார். ரிச்சர்டு இரவில் சிறுநீர் கழிக்க வெளியில் வந்தார். எங்கும் கடும் இருள் சூழ்ந்திருந்தது. வானத்தையே உற்றுப் பார்த்தார். கும்மிருட்டாக இருந்ததால் நட்சத்திரங்கள் மிக அருகில் இருப்பது போல் தோன்றின. அப்போது அவர் திடீரென்று தன் அன்னையின் பிரசன்னத்தை உணர்ந்தார். அவர் அங்கே அருகில் இருப்பது போலவும், தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது போலுமான உணர்வு தோன்றியது. அது சிறிது நேரத்திற்கு நீடித்தது. ரிச்சர்டிற்கு எதுவும் புரியவில்லை. அவர் தனது விடுதிக்குள் சென்று மீண்டும் படுக்கையில் விழுந்தார். அதை அவர் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை.

பகவான் தாஸ், தனது தேடலின் காரணமாக பல மகான்களை, ஞானிகளைச் சந்தித்தவர். அப்படிச் சந்தித்த பல ஞானிகளுள் முக்கியமானவராகவும், மறக்க

முடியாதவராகவும், தனது குருவாகவும் கருதிய ஒரு ஞானியைப் பற்றி மறுநாள் காலை ரிச்சர்டிடம் விவரித்தார். ரிச்சர்ட் அதனை முக்கியமாகக் கருதவில்லை. பகவான் தாஸ் அன்று ரிச்சர்டை அந்த ஞானியின் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். ரிச்சர்டின் விசா பிரச்சனை அந்த ஞானியின் ஆசியால் தீர்க்கப்பட்ட வேண்டும் என்பது பகவான் தாஸின் நோக்கமாக இருந்தது. இருவரும் அவரைப் பார்க்கப் புறப்பட்டனர்.

அது 1967 ஆம் ஆண்டு. அந்தச் சந்திப்பைத் தன் வாழ்க்கை வரலாற்றில் பின் வருமாறு விவரித்திருக்கிறார் ஆல்பர்ட் ரிச்சர்ட்:

"ஒரு நண்பரிடம் இரவல் வாங்கிய லேண்ட் ரோவரில் நாங்கள் குரு தங்கியிருந்த மலைப்பகுதிக்குச் சென்றோம். நான் அதிகப்படியான கஞ்சா புகைத்ததாலும், இந்தியாவில் மிக நீண்ட காலமாக இருந்து வந்ததாலும், ஒரு குருவைச் சந்திக்கப் பெரிதாக ஆர்வம் இல்லாததாலும் ஒரு மோசமான மனநிலையில் இருந்தேன். குரு குன்றின்மீது இருக்கிறார் என்பதை அறிந்து அங்கே சென்றோம். என் நண்பர் பகவான் தாஸ் வேகமாக அங்கே ஓடினார். நான் அவரை மெல்லப் பின் தொடர்ந்தேன். எங்களைப் பின்தொடர்ந்து பலரும் அங்கு வந்து கொண்டிருந்தனர். என் நண்பர் குருவின் கால்களில் வீழ்ந்து வணங்கினார். குருவைக் காண முடிந்ததில் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக எனக்குத் தோன்றியது.

குரு ஒரு மரத்தடியின் கீழ் அமர்ந்திருந்தார். ஒரு சால்வை போர்த்தியிருந்தார். அவரைச் சுற்றி ஏழெட்டுப் பேர் அமர்ந்திருந்தனர். குரு என்னைப் பார்த்தார். 'இங்கே வா. உட்கார்' என்றார். நான் அவரைப் பார்த்தவாறு அமர்ந்தேன், அவர் என்னை உற்றுப் பார்த்துச் சில கேள்விகளைக் கேட்டார். அது பயணம் குறித்ததாகவும், எனது கொடைத்தன்மை, அமெரிக்காவில் எனக்குக் கிடைத்த வருவாய் ஆகியவை குறித்ததாகவும் இருந்தது. பின் குரு என்னிடம், "நேற்று இரவு நீ நட்சத்திரங்களுக்குக் கீழே இருந்தாய்" என்றார்.

நான் ஆச்சரியப்பட்டேன்.

"நீ உன் அம்மாவைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாய்."

"ஆம்."

"அவள் கடந்த வருடம் இறந்துவிட்டாள்."


"ஆம்"

"இறப்பதற்கு முன்பு அவள் வயிறு மிகவும் பெரிதாகிவிட்டது."

"ஆம்."

அவர் பின்னால் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டு சொன்னார், "மண்ணீரல், அவள் மண்ணீரல் பிரச்சனையால் இறந்தாள்."

நான் திகைத்துப் போனேன். நேற்று நடந்த அந்த விஷயம் என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. யாரிடமும் நான் கூறியிருக்கவில்லை. குருவின் முன்னிலையில் அந்தத் தருணத்தில்



எனக்கு என்ன நடந்தது என்பதை என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியவில்லை. அவர் என்னை ஒரு குறிப்பிட்ட விதத்தில் பார்த்தார். அப்போது இரண்டு விஷயங்கள் நடந்தன. அவை காரணமும் விளைவும் போலத் தெரியவில்லை, மாறாக ஒரே நேரத்தில் நிகழ்வதுபோலத் தோன்றின. என் நெஞ்சில் ஒரு கடுமையான வலியையும், ஒரு பயங்கரமான பிசையும் உணர்வையும் நான் உணர்ந்தேன். எனக்கு என்ன நடக்கிறது என்பதே புரியவில்லை. என்னையுமறியாமல் நான் அழத் தொடங்கினேன். அழுது கொண்டே இருந்தேன். ஆனால் நான் மகிழ்ச்சியாக இல்லை; அதே சமயம் சோகமாகவும் இல்லை. அது நான் இதற்கு முன் அனுபவிக்காத ஒரு வகையான அழுகை. அது சில நாட்களுக்குத் தொடர்ந்தது. அதைப்பற்றி நான் சொல்லக்கூடிய ஒரே விஷயம், நான் எதையோ முடித்துவிட்டதைப் போல உணர்ந்தேன் என்பதுதான். என் பயணம் முடிந்துவிட்டது."

ஆனால், இதோடு ஆல்பர்ட் ரிச்சர்டின் அனுபவங்கள் முடிந்து போகவில்லை. அவர் சில நாட்கள் அந்த மலையிலேயே வேறொரு சீடரின் இல்லத்தில் சில நாட்கள் தங்க நேர்ந்தது. அதே சமயம் அவரது அறிவியல் மனம் சும்மா இருக்கவில்லை. அவர் ஓர் உளவியல் பேராசிரியர் என்பதா, தனக்கு நடந்தவை எப்படி ஏற்பட்டிருக்கும், குரு எப்படி எல்லாவற்றையும் தான் கூறாமலேயே உணர்ந்தார் என்றெல்லாம் யோசித்தவாறு இருந்தார். எல்.எஸ்.டி. போன்ற போதைப் பொருளை இதுபோன்ற ஞானிகளுக்கு அளித்தால் அவர்கள் நிலையில் என்ன வகை மாற்றம் ஏற்படும் என்று அறிவதில் ஆர்வம் கொண்டார். ஆனால், அதை வெளிப்படையாக குருவிடம் கேட்கவும் அவருக்குத் தயக்கமாக இருந்தது.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் தன்னுடன் புதிய எல்.எஸ்.டி. போதை

மருந்து அடங்கிய பாட்டில் ஒன்றை எடுத்துகொண்டு குருவைக் காணச் சென்றார். ரிச்சர்டை வரவேற்ற குரு, பின் ரிச்சர்டைப் பார்த்து, "உங்களுக்கு என்னிடம் ஏதேனும் கேள்விகள் உள்ளனவா?" என்று கேட்டார். ரிச்சர்ட் பதில் கூறாமல் இருந்ததைக் கண்ட குரு, "உங்கள் கையில் இருப்பது என்ன?" என்று கேட்டார். பின் எல்.எஸ்.டி. போதை மாத்திரைகள் அடங்கிய அந்த பாட்டிலை ரிச்சர்டிடம் இருந்து வாங்கி, பாட்டிலைத் திறந்தார். அதில் சில மாத்திரைகள் இருந்தன. அதைத் தனது கையில் கொட்டினார். அதில் உள்ள ஒவ்வொரு மாத்திரையும் 305 மைக்ரோகிராம் எடை கொண்டது. அறுபது வயதுடைய ஒருவருக்கு 50-70 மைக்ரோகிராம் போதுமானது என்பது ரிச்சர்டின் ஆய்வு முடிவு. ரிச்சர்ட் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, முதல் மாத்திரையை விழுங்கினார் குரு. பின் தொடர்ந்து இரண்டு மாத்திரைகள் என மொத்தம் மூன்று மாத்திரைகளை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக் கொண்டார். அதன் மொத்த எடை 915 மைக்ரோகிராம். அது ஒரு வலிமையான குதிரையைக்கூட வீழ்த்துவதற்குப் போதுமானது. அதனால் அடுத்து என்ன நடக்கும் என்று ஆவலுடன் ரிச்சர்ட் குருவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

வெகு நேரமாயிற்று. ஒன்றுமே நடக்கவில்லை. குரு வழக்கம்போல் அமர்ந்து சீடர்களுடன் பேசிக் கொண்டுதான் இருந்தார்.

ரிச்சர்டிற்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நீண்ட நேரம் ஆகியும் ஒன்றும் நிகழவில்லை. பின் குரு, ரிச்சர்டை நோக்கிக் கண் சிமிட்டினார். பின் "ஒன்றும் நடக்கவில்லை! ஒன்றுமே நடக்கவில்லை" என்றார்.

ரிச்சடிற்கு அது மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது. குருவின் உடலில் எந்த விளைவும் ஏற்படவில்லை என்பது ஆச்சரியத்தோடு அவருக்கு அதிர்ச்சியையும் தந்தது. மெய்யறிவு பெற்ற ஞானிகள் யோகிகளின் உடலில் போதை மருந்துகள் வேலை செய்யாது என்பதையும், எந்த விளைவையும் ஏற்படுத்தாது என்பதையும் ஓர் உளவியல் பேராசிரியராக, அறிவியலாளராகக் கண்கூடாக உணர்ந்து கொண்டார். அவர்கள் சாதாரண மானுடர்களின் அளவுகோல்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதையும், அளவுகோல்களுக்குள் அடங்காதவர்கள், அளவுகோல்களால் அளக்க முடியாதவர்கள்; அவற்றையெல்லாம் கடந்தவர்கள் என்பதையும் அந்தத் தருணம் அவருக்கு உணர்த்தியது. அதுவே அவரது வாழ்க்கையை மாற்றிய தருணமாயிற்று.

ஆல்பர்ட் ரிச்சர்ட் என்ற பெயர் கொண்ட அவ்வுளவியல் பேராசிரியர் பிற்காலத்தில் அந்த குருவின் சீடராக மாறினார். குருவாலேயே 'ராமதாஸ்' என்று பெயர் சூட்டப்பட்டார். குருவின் பெருமையை, சிறப்பை அமெரிக்கா தொடங்கி பல நாடுகளிலும் பரப்பினார்.

இப்படி இந்த அதிசய அற்புதத்தை நிகழ்த்திய அந்த குரு தான் மகாஞானி மஹராஜ் நீம் கரோலி பாபா.

(தொடரும்)

நிகழ்வுகள்

நிகழ்வுகள் - நடந்தவை



பிரசாத் ரெட்டி காடம்ரெட்டிக்கு 'சங்கர ரத்னா' விருது

சென்னை, சங்கர நேத்ராலயாவின் மருத்துவ சேவைகளை விரிவுபடுத்துவதில் காட்டிய அர்ப்பணிப்பு மற்றும் சமூகநலப் பணிகளை அங்கீகரிக்கும் விதமாக, டெக்சஸை தலைமையகமாகக் கொண்ட 'ட்விஸ்டட் எக்ஸ்' (Twisted X Inc.) நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியும் (CEO), சங்கர நேத்ராலயா (அமெரிக்கா)வின் ஆலோசனைக் குழு உறுப்பினருமான திரு பிரசாத் ரெட்டி காடம்ரெட்டி அவர்களுக்கு 2025 ஆண்டிற்கான 'சங்கர ரத்னா' விருது வழங்கப்பட்டது.

விருதை முன்னாள் பாரதக் குடியரசு துணைத்தலைவர் திரு எம். வெங்கையா நாயுடு, செப்டம்பர் 25, 2026 வெள்ளிக்கிழமையன்று சென்னை சங்கர நேத்ராலயாவில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

அமெரிக்காவில் வசிக்கும் மக்கள் பாரதத்தின் தொண்டுப் பணிகளுக்கு ஆதரவளிப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகத் திரு வெங்கையா நாயுடு குறிப்பிட்டார். பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மக்களுக்கு முழுமையான இலவச சேவைகளை வழங்கி வரும் சங்கர நேத்ராலயாவின் பணிகளை அவர் பாராட்டினார்.

தென்றல்



சங்கர ரத்னா விருது

சங்கர நேத்ராலயாவின் வளர்ச்சிக்குத் தன்னலம் கருதாமல் துணை நிற்கும் தகைசால் ஆளுமைகளை, மருத்துவமனையின் குறிக்கோள் மற்றும் கொள்கைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய தனிநபர்களை கௌரவிக்கும் விதமாக நிறுவனத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடும் வகையில் 2002-ஆம் ஆண்டில் முதல் 'சங்கர ரத்னா' விருது, காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளால் மும்பை தென்னிந்திய கல்வி சங்கத்தின் அறங்காவலர் திரு வி. சங்கர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அந்த நிகழ்விலேயே சங்கர நேத்ராலயாவின் நிறுவனர் டாக்டர் எஸ். எஸ். பத்ரிநாத் அவர்களுக்கு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் 'நேத்ர சேவா ரத்னா' விருது வழங்கியதும் நினைவுகூரத் தக்கது.

திரு பிரசாத் ரெட்டி காடம் ரெட்டி ஆந்திரப் பிரதேசத்தின் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள கலிவேலபாலம் கிராமத்தில் பிறந்தவர். காக்கிநாடாவில் பொறியியல் படிப்பை முடித்தார். அமெரிக்காவிற்குச் சென்று வணிக வாழ்க்கையைக் கட்டமைத்த அவர், 'ட்விஸ்டட் எக்ஸ்' நிறுவனத்தை ஒரு உலகளாவிய காலணி (footwear) பிராண்டாக உயர்த்தினார். அவர் சுகாதாரம், கல்வி, குழந்தைகள் நலன், முதியோர் பராமரிப்பு மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய சமூக நலம் சார்ந்த துறைகளின் தனது ஆதரவை வழங்கியதோடு, சங்கர நேத்ராலயாவின் பிதாமகர் பத்மபூஷண் டாக்டர் எஸ்.எஸ். பத்ரிநாத் அவர்களின் கனவுத்திட்டமான, மருத்துவ வசதிகள் குறைவாக உள்ள சமூகங்களுக்குக் கண் மருத்துவ சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில், தொடங்கிய நடமாடும் கண் அறுவை சிகிச்சை பிரிவை (MESU) நிறுவுவதற்கு ஆதரவளித்து, கண் மருத்துவ அறுவை சிகிச்சை முகாம்களை நடத்துவதற்குத் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறார்.

செப்டம்பர் 25, 2026 அன்று நடைபெற்ற சிறப்பு விழாவில், கார்னியா சேவைகள்



பிரிவின் சிறப்பு மூத்த ஆலோசகர் டாக்டர் பிரேமா பத்மநாபன் வரவேற்புரை நல்கினார்.

சங்கர நேத்ராலயாவின் மேலாண்மை வாரியக்குழுத் தலைவரும் செயல் மருத்துவ இயக்குநருமான டாக்டர் கிரிஷ் சிவா ராவ் மற்றும் தலைவர் டாக்டர் டி.எஸ். சுரேந்திரன் ஆகியோர், இந்தியாவின் முன்னாள் துணை ஜனாதிபதியும் இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினருமான திரு வெங்கையா நாயுடுவை கௌரவித்தனர்.

சங்கர நேத்ராலயா (USA) அமைப்பின் தலைவர் திரு பாலா ரெட்டி இந்துர்த்தியை, பார்வை ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் ரோனி ஜார்ஜ் கௌரவித்தார்.

திரு பிரசாத் ரெட்டி தனது ஏற்புரைக்குப் பிறகு, சங்கர நேத்ராலயாவின் சமூக சேவைகளுக்காக 1,00,000 அமெரிக்க டாலர் மதிப்பிலான காசோலையை நன்கொடையாக வழங்கினார்.

அறக்கட்டளையின் கௌரவச் செயலாளர் திரு. ஜி. ராமச்சந்திரன் நன்றியுரை வழங்கினார்.

மேலும் தகவல்களுக்கு அல்லது நன்கொடை அளிக்க, இணையதளம்: www.sankaranethralayausa.org

தொலைபேசி: (855) 463-8472

வரிவிலக்கு பெறக்கூடிய நன்கொடைகளை (வரிவிலக்கு அடையாள எண்: 52-1611548) பின்வரும் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பலாம்: Sankara Nethralaya USA, 7238 Muncaster Mill Rd, No. 522, Derwood, MD 20855

முனைவர் அ.போ. இருங்கோவேள், சங்கர நேத்ராலயா, சென்னை, இந்தியா.

Thendral Events Calendar



October 3 & 4, 2026, Saturday & Sunday

10:00am PST. Gruhapravesh - India Property Expo; Organized by IndiaProperty.com; Venue: Santa Clara Convention Center, Santa Clara, California; Contact: www.indiaproperty.com

October 3, 2026, Saturday

3:00pm EST. Carnatic Flute Concert by JA Jayant, accompanied by B Sreeram (Flute), NC Bharadwaj (Mridangam) and Vazhapally Krishnakumar (Ghatam); Organized by Carnatic Music Association of North America (CMANA); Venue: Community Middle School, Plainsboro, New Jersey; Contact: www.cmana.org

4:00pm EST. Carnatic Vocal Concert by Vignesh Ishwar accompanied by Sayee Rakshith (Violin), Praveen Sparsh (Mridangam), Chandrashekar Sharma (Ghatam); Organized by Carnatic Music Association of Greater Atlanta (CAMAGA); Venue: Hindu Temple of Atlanta, Riverdale, Georgia; Contact: www.camaga.org

4:30pm PST. Sai Naam - A musical offering by Sai Students Alumni of North America; Organized by Sri Sathya Sai Baba Abode of Supreme Peace, Tracy, California; Venue: Lakireddy Auditorium, Livermore Temple, Livermore, California; Contact: www.prashanthinilayam.org

தென்றல்





4:30pm PST. Damaru - Duality - A Bharathanatyam presentation by Smt. Vidhya Subramanian and Sparshana Dance Ensemble; Organized by South India Fine Arts; Venue: Dublin High School Performing Arts Center, Dublin, California; Contact: www.southindiafinearts.org

4:30pm PST. Carnatic Vocal Concert by Rohith Chandrasekar, accompanied by Prahlad Saravanapriyan (Violin), Naveen Basavanhaly (Mridangam); Organized by Indian Fine Arts Association of San Diego (IFAASD); Venue: Seaside Center for Spiritual Living, Encinitas, California; Contact: www.ifaasd.org

6:00pm PST. Carnatic concert by Mandolin Trio - Nagamani, UP Raju and Jaya Vigneshwar; Organized by Indian Fine Arts Association of San Diego (IFAASD); Venue: Seaside Center for Spiritual Living, Encinitas, California; Contact: www.ifaasd.org

6:30pm EDT. Carnatic Vocal Concert by Maalavika Sundar, accompanied by Vijay Muralidharan (Violin), Sai Raghavan (Mridangam) and Payyanur Govinda Prasad (Morsing); Organized by Dhvani - India Performing Arts Society of Central Ohio; Venue: Peggy McConnell Arts Center of Worthington, Worthington, Ohio; Contact: www.dhvaniohio.org

October 04, 2026, Sunday

3:00pm PST. Mad & Divine - The voice of Janabhai & Lalded by Rama Vaidyanathan; Presented by Samudra Dance Creations & Layadhwani Academy; Venue: Hillsdale Little Theater, San Mateo, California; Contact: www.tugoz.com/mad-divine

5:00pm EST. The Unlimited Aura Light Music Concert featuring Sivaangi Krishnakumar and Maanasi Kannan alongside The Untitled Band; Organized by Big Basky Event & Macha Swag Dance; Venue: North Gwinnett High School, Suwanee, Georgia; Contact: www.bookmytickets.us

October 9 - 11, 2026, Friday - Sunday

3rdi Films features its Annual Film Festival; Screenings include, 'A Celebration of the extraordinary work of Avie Luthra, Sand City, TechnoCats, The great Shamsuddin Family, Lali, Eternal Trees, Eternal Mountains, Ghost School and French-Sri Lankan director Lawrence Valin's The Loyal Man; Venue: Roxie Theater, San Francisco, California; Contact: www.thirdi.org

October 10, 2026, Saturday

3:00pm EST. Carnatic Vocal Concert by KS Vishnudev, accompanied by Alankode Gokul (Violin)m KV Prasad (Mridangam); Organized





by Carnatic Music Association of North America (CMANA); Venue: Grover Middle School, West Windsor, New Jersey; Contact: www.cmana.org

3:00pm PST. Marudhiruvar - A Dance Musical & Drama by Madurai R. Muralidharan with Live Music; Presented by Bharati Tamil Sangam; Venue: HUSD Performing Arts Center, Hayward, California; Contact: fb.com/BharatiTamilSangam

Navarathri Community Concerts; Organized by South India Music Association (SIMA); Venue: TBD; Contact: www.simala.net

October 11, 2026, Sunday

4:00pm EDT. Navarathri Chamber Vocal Concert by Kailash Hemachandra, accompanied by Laya Raghav (Violin), Dr. Ajay Ravichandran (Mridangam); Organized by Dhvani - India Performing Arts Society of Central Ohio; Venue: Residence of Shylaja & Kamalesh, Lewis Center, Ohio; Contact: www.dhvaniohio.org

5:00pm PST. The Unlimited Aura Light Music Concert featuring Sivaangi Krishnakumar and Maanasi Kannan alongside The Untitled Band; Organized by Big Basky Event & Macha Swag Dance; Venue: James Logan Theater, Union City, California; Contact: www.bookmytickets.us

October 23, 2026, Fiday

7:00pm CST. Light Music Concert by Anuradha Sriiram with Yatra Band; Organized by Big Basky Events; Venue: Grand Center, Dallas, Texas; Contact: www.bookmytickets.us

October 24, 2026, Saturday

4:30pm PST. US Tamil Professionals Network (USTPN) AI Tech Meetup; Program









features Cybersecurity Careers by Raj Nagalingam; Organized by USTPN; Venue: 46200 Landing Pkwy, Fremont, California; Contact: Narasimhan 650.793.0056, Nehru: 404.934.2842

5:00pm PST. Carnatic Vocal Concert of KS. Vishnudev, accompanied by VS Gokul (Violin), KV Prasad (Mrudangam), Vivek Chellappa (Kanjira); Organized by South India Music Association (SIMA); Venue: Bristol Civic Auditorium, Bellflower, California; Contact: www.simala.net

October 30, 2026, Friday

Lecture Demonstration by RK Shriramkumar; Organized by South India Music Association (SIMA); Venue: TBD; Contact: www.simala.net



October 31, 2026, Saturday

1:00pm EST. Deepavali Celebration featuring Kalyan's Golden Rhythms Light Music Concert; Organized by New York Tamil Sangam; Venue: The Hindu Temple Community Center, Flushing, New York; Contact: www.newyorktamilsangam.com

3:00pm EST. Carnatic Mandolin Concert by U Rajesh & National Carnatic Music Competition; Organized by Carnatic Music Association of Greater Atlanta (CAMAGA); Venue: Hindu Temple of Atlanta, Riverdale, Georgia; Contact: www.camaga.org

5:00pm PST. Carnatic Violin Duet by RK Shriramkumar and VVS Murari; Organized by South India Music Association (SIMA); Venue: TBD; Contact: www.simala.net

November 07, 2026, Saturday

4:00pm PST. Kolam at the threshold - A bharathanatyam concert led by Rasika Kumar, Principal Artist of Abhinaya Dance Company; Program features vocals by Roopa Mahadevan, Sindhu Natarajan & Ananya Ashok; Organized by Abhinaya Dance Company; Venue: Mexican Heritage Plaza, San Jose, California; Contact: www.abhinaya.org


சின்னக் கதை



கழுதை இறந்தது

ஆன்மிக சாதனையோ, உலக வாழ்க்கையோ எதுவானாலும், ஆழமாகச் சிந்தித்து, அது நன்மை தரும் என்று திருப்தி அடைந்த பிறகுதான் ஒவ்வோர் அடியையும் எடுத்து வைக்க வேண்டும், இல்லையெனில், அது அழுமூஞ்சி நகரத்தின் கதைபோல ஆகிவிடும்.

ஒருநாள், ராணியின் நெருங்கிய பணிப்பெண் ஒருத்தி மிகுந்த துயரத்தில் அழுதுகொண்டே அரண்மனைக்கு வந்தாள். அதைப் பார்த்து ராணியும் கண்ணீர் சிந்தத் தொடங்கினார். ராணி அழுவதைக் கண்டதும், அந்தப்புரம் முழுவதும் அழுதது. அந்த அழுகை ஆண் சேவகர்களுக்கும் தொற்றிக் கொண்டது. தேற்ற முடியாத சோகத்தில் ராணி அழுவதைக் கண்ட அரசரும் சேர்ந்து அழுதார். அதைப் பார்த்த நகரமே ஓலமிட்டு அழுதது.



பகவான்
ஸ்ரீ சத்ய சாயி பாபா

கடைசியாக, விவேகியான மனிதர் ஒருவர் இதைக் குறித்து விசாரிக்கத் தொடங்கினார். அந்த விசாரணை, ஒவ்வொருவராகக் கடந்து இறுதியில் ராணியைப் போய் அடைந்தது. தனது பணிப்பெண் மிகவும் துக்கத்தில் இருப்பதாக ராணி சொன்னார். சலவைத் தொழிலாளியான அந்தப் பணிப்பெண்ணை விசாரித்தபோது, எல்லாவற்றுக்கும் காரணம் தனக்குப் பிடித்த கழுதை திடீரென்று இறந்ததே என்று ஒப்புக்கொண்டார்.

இந்தச் செய்தி பரவியபோது, அழுகை நின்று, எங்கெங்கும் பரவலாகச் சிரிப்பும் வெட்கமும் ஏற்பட்டன. சிந்தனை செய்யுங்கள், பகுத்தறியுங்கள்; அவசரப்பட்டு முடிவு எடுக்காதீர்கள். வெறும் வதந்திகளால் தடம்மாறிப் போகாதீர்கள்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

In Bay Area over 25,000 families believe it brings good luck when they buy Gold & Jewelry from Manisha Jewelers

Manisha JEWELERS

Serving the community for over 25 years @ same location

Grand Re-Opening
Early September 2025

at our same location
We Welcome You to our Upgraded Store

Highest Stock,
Best Quality &
Best Price than any store in the Bay Area.



ALL NEW Stock
Latest & Most Modern Jewelry Designs
Excellent Selection of latest & uncut Diamond Jewelry



New Arrivals
World's Best Turkish Jewelery

Available World's best Jewelry in Variety, Design, Workmanship & Finishing

Check weight of Jewelery!
Our Weight-wise Price is the Best-in-Town

Tuesday - Saturday 11:00 AM to 7:30 PM
Sunday 11:00 AM to 7:00 PM
Closed Mondays

Our Motto
Quality of Gold

Famous for 22 Karat Jewelery

408.249.3898

1053 E. El Camino Real, #5
Sunnyvale, CA 94087
Fax: 408.249.3897

DAILY LUNCH SPECIALS

Chaat House

Catering for your special occasion is our specialty

FOOD FOR YOUR SOUL

Serving Authentic Indian Snacks & Veg. Thali

SNACKS & REFRESHING DRINKS

CELEBRATING 11 YEARS IN INDIAN CUISINE & CHATPATE SNACKS





10 FRESH ROTS FOR $3.50






Now Serving You at 4 Convenient Locations

- 889, E. El Camino Real, Sunnyvale, CA 94087 Ph: **408.733.9000**
- 939. W. El Camino Real, Sunnyvale, CA 94086 Ph: **408.733.1111**
- 46465. Mission Blvd., Fremont, CA 94539 Ph: **510.505.9999**
- 21267 Stevens Creek Blvd, Cupertino, CA 95014 Ph: **408.973.0460**

www.chaatus.com



தென்றல்

Classifieds



*For subjects of Tamil lineage, residing in the US, matrimonial classified listings are **FREE**, as a service to the community, at this time.*

For all others - **$25** for 20 words; **$0.25** for every additional word. Make checks in favor of '**Thendral**'

Send classified text by email to **thendral@tamilonline.com** with subject - Matrimony Classifieds Send email for guidance & details. No phonecalls, please.

http://tamilonline.com/thendral/classifieds.aspx

VELMONT

SPIRITUAL CENTER

SAN FRANCISCO BAY AREA



NOW VELMONT IS

OPEN EVERY SUNDAY

10:00 AM to Noon

for visitors.

A PLACE FOR SPIRITUAL GROWTH AND INNER PEACE

All are Welcome

CONNECT WITH TRADITION, CULTURE AND COMMUNITY

Contact: Contact@velmont.org

Phone: 925-385-6225

SPIRITUALITY • SERVICE • COMMUNITY

New India Bazar

Visit

www.NewIndiaBazar.com

For the location nearest you.



All Major
Credit Card Welcome!

DISCOVER · MasterCard · VISA · AMERICAN EXPRESS

WE ACCEPT EBT CARDS/SNAP BENEFITS AT EACH OF OUR LOCATIONS

NOW OPEN
INDIAN VEGETARIAN STREET FOOD
PLEASANTON LOCATION

OPEN 7 DAYS

Serving the San Francisco Bay Area at 7 Convenient Locations

New India Bazar now ships groceries anywhere within the United States at unbelievable prices! Please email your order to **customersupport@newindiabazar.com**

www.newindiabazar.com ***Your One-stop Friendly Neighborhood Grocery Store***

Best Quality ▪ Friendly Service ▪ Unbeatable Prices

FRESH MADE SWEETS AND ROTI PARATHAS Available Every Day